
மலர்-1
மலர்வு-வள்ளுவராண்டு சுறவம் 2027 (தை 1996)
2018



# கமலம்

அன்பின் தமிழீழப்பெருமக்களே!
எதிர்பாத்திருங்கள்.
தொடர்ந்து மலரும்

கமலம்

>>தமிழால் தமிழரை ஏமாற்றி வாழ்ந்த–வாழுகிற பெருந்தமிழர்களை, அவர்தம் இனவழிப்புச் செயற்பாட்டை இனங்காட்ட---

>>ஆரியத்தால்–ஆரிய அடிவருடிகளால் பொய் உரைகள் எ.ழுதி மறைக.கப்பட்ட தூய தமிழை உங்கள் முன் கொண்டுவர-----

>>தமிழர் பண்பாட்டைத் தாழ்த்தி நிற்கும்–ஆரிய ஆபாசக்காவியங்களில்–மாமனிதர்களையும்–தமிழ்ப் பண்பாட்டையும் தேடுகிற, சிந்தனையற்ற எழுத்தாளர்களுக்கு தமிழர்பண்பாட்டையும்–தமிழ் மாமனிதர்களையும் எடுத்துக்காட்ட---

மலர்கிறது

*கமலம்*

வண்டினங்கள் தேனருந்திக் களியாட–மங்கையர்கள் சூடி மகிழ மலரும் கமலமல்ல இது.
தமிழின் பகை கண்டால் கனன்று எரிக்க தீயில் மலரும்

*கமலம்*

இது ஒரு பொழுதுபோக்கு இதழல்ல. ஆய்வுத் தொகுப்பு நூலான, முத்திங்கள் ஏடு
கமலத்தின் எண்ணத்தடிப்படையில் சீர்திருத்தக் கருத்துடையோரின் ஆய்வுகள் வரவேற்கப்படும்.

தொடர்புகளுக்கு

S.KA ... THAN-HASSEL ...

ARANGA MURUGA.YA
3 HASTINGS ROAD
EALING
LONDON W13 8Q



ஆசிரியம்

என் உயிரின் இனிய தமிழ்நாட்டினமே! (தேசியம்) வாழ்க நீ ! வாழ்த்தி உன்னை நோக்குகின்றேன். வந்தாரை வரவேற்று வாழவைக்கும் உன் உயர் பண்பை–வஞ்சகச் சதிக்குப் பயன் படுத்தி, சாதி–சமயச் சழுக்குகளால்–ஆரியம் செய்த சதியால், இரண்டாயிரம் ஆண்டுகளாக அடிமைத்தளையில் கட்டுண்டு கிடந்தாய்.

இன்றந்த அடிமைத் தளையை அறுத்து–இருளிலிருந்து சுதந்திர ஒளிமயமான நாட்களுக்குத் திரும்புவதற்கான விடியலின் வைகறை தோன்றுகிறது. இந்த வைகறைப் புலர்வு உன் வரலாற்றில் இடைக்கிடை பலதடவை தோன்றிய போதிலும், நீ வீழ்ப்படைந்துவிடாமல், உன்மொழி பேசிய பார்ப்பாரும்–உண்டிக்காக பார்ப்பாரின் அடிதடவிய அடிமைத் தமிழர்களும் அயராது பாடுபட்டு வந்துள்ளதை வரலாறு காட்டுகிறது.

பரிமேலழகன் வாழ்க்கைத் துணைநலத்திற்கு, ஆரிய–பார்ப்பார–மனு–வேதம் இவற்றடிப்படையிலான பெண்ணடிமைப் பண்பில் உரை செய்து, தமிழரின் சமுக வாழ்வையுடைத்து, தமிழினத்தைக் தாழ்த்தினான். சிந்தனையற்ற தமிழறிஞர்களும் அவனை அப்படியே பின்பற்றினார்கள்.(வள்ளுவன் கண்ட வாழ்க்கைத் துணைநலம்–அழலாடி)

"உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியன்" என்ற நச்சுப் பார்ப்பான், தொல்காப்பியம் பொருள திகாரத்தில் "நெஞ்சு தளையவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்" என்ற அடிக்கு–மணமுடித்த முதல் மூன்று நாளும் முயக்கமின்றி சான்றோர்க்கு இயன்ற வரை பள்ளிப் பணிபுரிந்து, நான்காம் நாள் பகல் கழிந்து என்று கற்பனைப் பொய்யுரை எழுதினான். (தமிழர் வாழ்வறத்தில் தாலி–பாவலர் திருமாலனார்)

மதிப்புள்ள தமிழ்ப்பிள்ளை–ஆயினும் தமிழர் என்றால், கொதிப்புள்ள பார்ப்பாரென்ற–கூட்டத்தார் தம்கைப்பிள்ளை, குதிப்புள்ள வடமொழிக்கு–குள்ர் தமிழ்ப்பிள்ளை என்னும், புதுப்பிள்ளையான வையா–புரிப்பிள்ளை வாழ்வார்.(பாரதிதாசன் எனப்பட்ட சுப்புரத்தினக் கவிஞன்)

தமிழ்வளர்த்த–தமிழ்த்தாத்தா எனப்போற்றப்பட்ட உ.வே.சாமிநாதையர் என்ற பார்ப்பார், புறத்திலே "குரவர்த் தப்பிய கொடியோர்" என்ற அடி மூலத்தில் இருக்க, பார்ப்பார் தப்பிய கொடியோர் என மாற்றி, வர்க்க நலன்சார்ந்து எழுதினார். ( தமிழனின் ஒரே கவிஞன்–சாலை இளந்திரையன்)

இப்படி எண்ணற்ற துரோகங்கள் தமிழின்–தமிழனின் வரலாற்றில் நிறைந்து காணப்படுகின்றன.

இந்த வழிப் பாரம்பரையிலே, அண்மிய நாட்களில் மிக வேகமாக–புத்திசாலித்தனமாக, தமிழால் தமிழரை ஏமாற்றி, தன் கவிதைகளால் விதியே என்று கைகட்டிக் கதறி நிற்கும் பண்பைத் தமிழரிடை வளர்த்து–தமிழரைத் தாழ்த்தும் பணியைத் திறம்படச் செய்தவன்–புரிந்து கொள்ளாத மண்டூகங்களால் பாரதி எனப் போற்றப்பட்ட சுப்பிரமணியன் என்னும் பார்ப்பாரக் கவிஞன் ஆவான்.

இனியும் இந்த ஆரியத்தின் அடிநக்கும் தாசத் தமிழர்களையும்–அவர்தம் எழுத்துக்களையும் தமிழுக்குள் நடமாட விடக்கூடாது–விடமுடியாது. அவர்களை தமிழர்களுக்கு அடையாளம் காட்டி அடித்துத் துரத்தவேண்டிய கட்டாயமும்–கடமையும் இன்று நமக்கேற்பட்டுள்ளது.

ஆம், உலகெங்கும் சிதறி–தன்னடையாளம் தெரியாமல் ஏங்கிக் கிடந்த தமிழனம், இன்று தலை நிமிர்ந்து–தன்னையுணர்ந்து–தோள்தட்டி நிற்கிறது. அதனுடைய தலைவனாக–ஒப்பாரும் மிக்காருமற்று–உலகின் உயரிலக்கியங்கள் கூறும் உத்தமத் தலைவனின் பண்புநலம் அனைத்தும் கொண்ட தலைவனாக–தமிழீழ மண் தந்த தவப்புதல்வன்–வீரவேங்கை–பிரபாகரன், தமிழீழத் திருநாட்டை மீட்டெடுத்து–தமிழினத்தின் பண்டைச் சிறப்பை மீண்டும் நிலைநாட்டப் புறப்பட்டு வெற்றிநடை போட்டு, வீரவேங்கைகள் எனும் புள்ளினங்கள் விடியல் பண்பாட–அடிமையிருள் விரைந்தகல–தாய்மண்ணில் சுதந்திரத் தென்றல் வீசவருகிறான்

இந்த இனிய வைகறையிலே, காலத்தின் தேவையிலே நமக்கேற்பட்டுள்ள கடமையைச் செய்ய–ஒட்டுண்ணிகளை அடையாளம்காட்டிச் சுட்டெரிக்க–தனித்தமிழ்ச் சிந்தனையை தாழ்த்தம் தறுதலைகளைச் சாட மலர்கிறது கமலம்.

முதலில், பாரதி எனப்பட்ட பார்பாரச் சுப்பிரமணியனின் ஆரியம் சார்ந்த படுதுரோகத்தை, எடுத்துங்கள் முன் வைத்து மலர்கிறது கமலம்.

ஆசிரியர்
அழலாடி

திருக்குறளின் முதற்குறள்–அகரமுதல–––என்ற குறளுக்கு இதுவரை உரைக்கப்பட்ட பொருள்கள் பொருந்தவில்லை எனக்கமலம் கருதுகிறது. எங்கே, தமிழார்வம் உள்ளவர்கள் தேடுங்கள் மெய்யுரையை! –––––கமலம்–––––



# பாரதியார்

## பாரதி––யார்?

## பாரதி ஒரு ஆரிய அடிவருடிப் பாவலன் தமிழைத் தாழ்த்திவிட தமிழால் பாடியவன்

இரண்டாம் மூன்றாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை, தமிழீழம், தமிழகம் இன்னும் பல தமிழ் நிலங்களில், பாடநூல்களில் இணைக்கப்பட்டு பாராட்டுகளுடன் பயிலப் படுபவன் பாரதி என்ற சுப்பிரமணியக் கவிஞன்.

பயிலப்பட வேண்டியவன் தானா? பாராட்டப்பட வேண்டியவன் தானா? அவனுடைய படைப்புகளில் காணப்படும் உள்நோக்கம் என்ன? என்று எள்ளளவும் எண்ணிப் பாராமல்,

பாட்டுக்கு ஒரு புலவன் என்றும், சக்தியருள் பெற்ற மகாகவி என்றும், அவனைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

தமிழகத்தின் பார்ப்பாரும், ஆரிய அடிவருடிகளும், அவனுடைய உள்நோக்கத்தை உணர்ந்துகொண்டு, தமிழர்களால் அவன் எற்றுக்கொள்ளப்படுவதற்கு, அவனை ஆகா ஓகோ என்று தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள் எவன் சொன்னாலும் கேட்டு ஏமாந்துபோகிற தமிழர்களும் அவர்கள் சொன்னதைக் கேட்டு பொதுமேடைகள் அமைத்துப் புகழ்ந்து போற்றினார்கள்.

தமிழனைக் தாழ்த்தி அடிமை கொள்வதற்கு, ஆரியன் வடமொழியைப் பயன்படுத்தினான். ஆங்கிலேயன் ஆங்கிலத்தைப் பயன்படுத்தினான். ஆனால், பாரதி என்றழைக்கப்பட்ட சுப்பிரமணியனோ, தமிழையும்–தமிழனையும் ஆரியத்துள் தள்ளிவிட தமிழையே பயன்படுத்தினான்.

தமிழினத்தின் விடிவெள்ளி–தமிழினம் அடிமைப் படுகுழியிலே சிக்கிச் சீரழிந்த காலத்திலே பகுத்தறிவுப் போரைத் தொடங்கி விழிப்புறச் செய்தவன்–சாதியமைப்புக்கு–பெண்ணடிமைக்கு–மூடநம்பிக்கைகளுக்கு–சமயச்சீரழிவுகளுக்கு –அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியவன். மக்களைத் தட்டியெழுப்பி அணிதிரளச் செய்தவன். மகாகவி–அந்தப் பாரதியையா? துரோகி என்கிறான், என்று திகைப்பீர்கள்–எள்ளிநகையாடுவீர்கள்.

உண்மைதான். பாரதிபாடல்கள் மூலம் காட்டப்பட்டதும் –திரும்பத் திரும்ப எமக்கு ஊட்டப்பட்டதும், அத்தகைய பாரதி யைத்தான். அதுவும் ஒரு திட்டமிட்ட சதியே.

பாரதிபாடல்களையும்–பாடல்களைவிட அதிகமாக எழுதப்பட்டதும், பாடல்களுக்கு முற்றிலும் மாறுபட்டதுமான பாரதி

கட்டுரைகளையும் எடுத்தாய்ந்து பார்த்தால் நீங்கள் என்கருத்தை மறுப்பின்றி ஏற்றுக்கொள்வீர்கள்.

தேமதுரத் தமிழ் என்றும், சொல்லில் உயர்ந்தது தமிழ்ச் சொல்லே என்றும், யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்றும், தமிழைப் போற்றிப்பாடிக் கொண்டே, தமிழின் சிறப்பைத் தமிழன் உணர்ந்துவிடாமற் செய்வதற்கும், பார்ப்பானான பாரதி பார்ப்பனியத்தைப் பாதுகாப்பதற்கும், சூழ்நிலையால் ஏற்பட்ட இந்திய ஒருமைப் பாட்டின் தலைமையை–ஆட்சி அதிகாரத்தை, வடவாரியப் பார்ப்பாரிடம் பெற்றுக் கொடுப்பதற்கும், தன் படைப்புகள் மூலம் பெரிதும் முயன்றுள்ளான்.

இந்தியாவிலுள்ள பதினெட்டுத் தேசிய இனங்களினுள்ளும் தமிழினத்தினுள் மட்டுமே இத்தகைய துரோகிகள் தோன்றி வளர்ந்தார்கள: வளர்க்கப்பட்டார்கள். ஏனென்றால், இந்திய உபகண்டம் முழுவதுமே தமிழனுடையது என்பது மட்டுமல்ல, பண்டைச்சிறப்பும் நாகரீகவளமும், உயர்மொழித்திறனும் கொண்டது தமிழினம் ஒன்றுதான். அந்த இனத்தை அடிமை கொண்டுவிட்டால் இந்தியமே அடிமையாகிவிடும். ஆகையினால் கடந்த இரண்டாயிரங்களுக்கு முன்பிருந்தே இந்தக் கடைசி நிமிடம் வரை தொடர்ந்து முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

இந்த முயல்வுக்கு முழு ஆதரவு தந்தவன் தான் பாரதி எனப்படும் கவிஞன் சுப்பிரமணியன். இனி இக்கட்டுரை முழுவதிலும் பாரதி என்ற சொல்லின்றிச் சுப்பிரமணியன் என்றே இக்கவிஞன் அழைக்கப்படுவான்.

இனி இக்கவிஞனின் படைப்புகளைப் பற்றி ஆய்வோம்

இந்தியதேசம் பற்றி

இந்திய தேசத்தைப் பரதகண்டம்–பாரதம் என்றும் கூறப்படுகிறது. இந்தப்பெயர் பரதன் என்றொருவன் ஆண்டதால் வந்த பெயர் என்று ஒருகாடி விட்டிருக்கிறான் சுப்பிரமணியன்.

இந்தப் பரதன் யார்?------துச்யந்தன் என்ற ஆரிய இள வரசனும் சகுந்தலை என்கின்ற முனிகுமாரியும் காட்டிலே தனிமையில் சந்தித்தார்கள். ஒருவரையொருவர் கண்டதும் காமம் மிகுந்து, ((வடவரின் இலக்கியங்களிலே காமப்பித்து தலைக் கேறிய கதாநாயகர்கள், பெண்ணைக் கண்டதும் மிருகங்களைப் போல் எப்படியும் அவளைப் புணர்ந்து கொள்வதற்கு வசதியாக எட்டுத் திருமணமுறைகளை வைத்திருக்கிறார்கள். அவற்றுள் ஒன்று, பெண் விருப்பத்துடன் கணையாழியை மாற்றிக்கொண்டு மனைவியாக்குதல்–தமிழர்களிடையே இப்படியான மணமுறைகள் இல்லை.)) காந்தர்வமுறையிலே கூடினார்கள். அந்த உடற்றினவில்



பிறந்தவன் தான் பரதன். தகாத நடத்தையினால் ஏற்பட்ட இந்தப் பிறவிக்கு முன்னரே பரதகண்டம் இருந்தது.

பரதகண்டம் என்கிற பெயரைத் தங்களுக்கு ஏற்றதாக மாற்ற–இந்தப் பரதனை ஒருபுனிதனாக–சிறந்த கதாநாயகனாக புனைகதைகளில் சித்தரித்து உருவாக்கி, அவன் ஆண்டதால் அவனது பெயரால், பரதகண்டம்–பாரதம் என்ற பெயர் நாவலந் தீவுக்கு–(இந்தியா) ஏற்பட்டதாகக் கூறுகிறான் சுப்பிரமணியன்.

வடவனுடைய புனைகதையையும், பெயருக்கான உண்மைக் காரணத்தையும், கற்றுணர்ந்த கவிஞன் அறியாத தல்ல. அறிந்திருந்தும் காடி விடுகிறான்.

உலகின் முதல் நாகரீகத்தைப் பிறப்பித்தவர்களும், கட லோடும் வீரர்களாகவும் குமரிக்கண்டம் அழிவதற்கு முன்பிருந்தே சிறந்து விளங்கியவர்கள் தமிழர்கள்–பாண்டியர்கள்.

கி.மு நாலாயிரங்களுக்கு முன்னரோ தமிழர்கள் கட லோடிய சான்றுகள் கிடைத்துள்ளன. மிகப் பழைய சுமேரியாவின் தலைநகரான ஊர் என்னும் நகரின் புதைபாடுகளுள்ளே, சோநாட்டு தேக்குமரப் பலகைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.–1.

கடலோடிகளைத் தமிழில் பரதர் என்பர். இன்றும் தமிழரிடையே பரதர் என்றொரு கடலோடும் சமூகப்பிரிவு உள்ளதை யாவரும் அறிவர்.

உலகின் மிகமுந்திய நாகரீகத்திலே, கி.மு எண்ணாயிர ங்களுக்கு முன்னரோ, உலகம் பாண்டியராகிய பரதரை அடையாளம் கண்டிருந்தது. அன்று இந்திய உபகண்டம் முழுவதும் தமிழருடையதாய் இருந்தது. அதனாலேயே, பரதர்+ கண்டம்=பரதகண்டம்=பாரதம் என்று அழைக்கப்படலாயிற்று.உ.

அல்லாமலும் எந்த ஒரு வரலாற்று நாளிலும் வடவர் அகில இந்தியாவையும் ஆண்டதாக வரலாறு இல்லை. அப்படி இருக்க எங்கோ ஒரு மூலையில் இருந்த பரதனின் பெயரால் பாரதம் என்ற பெயர் ஏற்பட்டதென்று ஏற்றுக்கொள்ளமுடியுமா?

ஆனால் தமிழன் தென்குமரி முதல்–இமயத்திற்கு அப்பாலும், கங்கைக்கு அப்பாலும் ஆண்டிருக்கிறான். கி.மு களிலும் ஆண்டிருக்கிறான், கி.பி களிலும் ஆண்டிருக்கிறான்

லோககுரு என்கிற கட்டுரையிலே, பாரததேசம் லோக த்தின் குரு என்று கூறுகிறான். உண்மைதான். அழிந்த குமரியின் எஞ்சிய பகுதியும், புதிய தோற்றமும் தான் இந்திய உபகண்டம். தமிழனுடையது. அந்த மண்ணிலே தான் குமரி அழிவதற்கு முன்

---

ஆதாரம்–1. திராவிட நாகரீகம்– கலாநிதி.மு.தெய்வநாயகம்.

உ. திராவிடர் சமயம் – " "

கி.மு பத்தாயிரங்களிலே சிறந்த நூல்கள் எழுந்தன. இடைச்சங்க காலம்வரை எழுந்த நூல்களனைத்தும், கடைச் சங்ககாலத்தெழுந்தவை பலவும், ஆரியச்சதியினால் அழிக்கப் பட்டுவிட்டன. இத்தகைய பண்பாட்டு–நாகரீக வளத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியதால் நாவலந்தீவு லோககுரு தான். ஆனால், சுப்பிரமணியன் என்ன கூறுகின்றான் என்றால், கி.மு இரண்டாயிரங்களளவில் மாடுமேய்த்துக்கொண்டு, கல்வியறிவற்ற, நாகரீக வளர்ச்சியற்ற, வெறும் வாய்ப்பேச்சு மொழியுடன், நாவலந்தீவுக்குள் நுழைந்த வெள்ளைக்கூட்டம், தங்கள் பேச்சு மொழியுடன் (சங்கதம்) தமிழைக் கலந்து உருவாக்கிய சமக்கிருதம் பாரதமொழிகளின் மூலாதாரம் என்றும், அந்தச் சமக்கிருதத்தினாலும், ஆரியநாகரீகத்தினாலும் தான் பாரதம் லோககரு என்று. எத்தகைய கொடிய சதி!

புனர்ஜென்மம் என்ற கட்டுரையிலே, பாரதசாதி அழிவில் லாதது. காரணம், அதன் மூலபலமான ஆரியசம்பத்தும், ஆரியரின் அறிவும் அதன் பலன்களும் என்று கூறுகின்றான். சம்பத்து என்றால் தமிழில் செல்வம் என்று பொருள். ஆரியச்சம்பத்து என்றால் ஆரியச்செல்வம். ஆரியர் வழிக்கிடைத்த செல்வம். கட்டுரையின்படி, குறள் போன்ற நூல்களும், தமிழ் இலக்கியங் களும், கலைச்செல்வங்களும், பண்டைய சிற்பக் கோவில்களும் அடங்கும். கி.மு பத்தாயிரங்களிலேயே சங்கமமைத்து மொழி வளர்த்த தமிழனுடைய செல்வங்கள் ஆரியரிடம் இருந்து பெற்றவை என்கிறானே. என்னே! துணிச்சல் இந்தப் பார்ப்பாரச் சுப்பிரமணியனுக்கு.

வடவன் தன் வெள்ளை நிறத்தைக்காட்டித் திராவிடரை ஏமாற்றி, கற்புநெறி கவைக்குதவாதது என்று கருதும் தன்னினப் பெண்டிரை மதுவோடு சேர்த்து வழங்கித் தமிழக மன்னர்களை ஏமாற்றி,((பிற்காலச்சோழர் என்னும் கலப்புச்சோழர் காலத்தில் இவ்விதம் சோழர்களை ஏமாற்றி தமிழகத்தை ஆரியம் முற்றாக மூடியது. – கி.பி 9–12 ம்நூற்றாண்டுக் காலப்பகுதி)) இயற்கைச் சிவநெறியை வேதம் என்னும் அநாகரீகக் குப்பைக்குள் கலந்து, சமயமூடாக தமிழ் வாழ்வுக்குள் நுழைந்து, வடமொழிச் சொற்களை தமிழுக்குள் கலந்து, தமிழ் வடமொழியிலிருந்து தோன்றியது என்று நிறுவ, அன்றிலிருந்து இன்றுவரை முயன்று கொண்டிருக்கிறான். இன்று தமிழகத்திலும் ஈழத்திலும் தமிழன் அழிவதில் இன்பம் காண்கிறான். இந்த வடவனைத் தலைமைக் குக் கொண்டுவாப் படாதபாடுபடுகிறான் சுப்பிரமணியன் அவன் வடமொழிப் பார்ப்பான்–இவன் தமிழ்மொழிப் பார்ப்பான். சாதியால் ஒன்று = பார்ப்பனீயம்.



பாரததேசம் என்கிற பாடலிலே, இன்றைய இந்தியாவின் ஒற்றுமையை–சிறப்புகளைப் பாடவந்த சுப்பிரமணியன், சிந்துநதி மீது சேரத்துப் பேரழகிகள் சகிதம் சிந்தை மயக்கும் சுந்தரத் தெலுங்கில் பாட்டிசைத்து வருகின்றான். சிங்கமராட்டியருடைய கவிதை கண்டு போற்றிப் பரிசளிக்கிறான். இராசபுதனத்து வீரத்தை ஆகா என்று பாராட்டுகின்றான். தமிழ்நாட்டை–தனக்கு வயிற்றுக்குப் போடுகிற நாட்டை எண்ணியவுடன் காவிரி வெற்றிலை என்று பாடுகிறான். என்னே! இகழ்ச்சிக் குறிப்பிது. தமிழ் நாட்டின் சிறப்பைக் கூற வேறொன்றும் அவனுக்கு தோன்றவில்லையா?

தமிழர் கலைகளெங்கே? மொழியெங்கே? சிற்பத்திறன்களெங்கே? தமிழனின் சிந்தனைக் கருவூலங்கள் எங்கே? ஒன்றுமே அவனுக்குச் சிறப்பாகத் தோன்றவில்லை. அவனுடைய காலத்து வெள்ளைத்துரை ஒருத்தன், தமிழர்கள் பொதுவிடங்களில் எச்சில் துப்புகிற தூய்மையற்றவர்கள் என்று கூறினானாம். அவனுடைய கூற்றுக்கு அடிப்படையான–தெருவை அசிங்கப் படுத்துகிற துப்பும் பழக்கத்தைத் தூண்டுகிற வெற் றிலையைச் சுட்டிக்காட்டி, மறைமுகமாக வெள்ளையனை வழி மொழிந்து தமிழர்களை அவமதித்திருக்கிறான்.

தாயின் மணிக்கொடி பாரீர் என்கிற பாடலிலே, இந்திய தேசியக்கொடி பட்டொளி வீசிப்பறக்கிறது வானிலே. அதைக் கண்டு உவகையிலே, உள்ளப்பூரிப்பிலே, அந்தக் கொடியைப் பாதுகாத்து நிற்கும் வீரர்களைப் பார்க்கிறான். ஆகா! பல்வேறு மாநிலத்து வீரர்கள். வெவ்வேறு உடலமைப்பு, வெவ்வேறு பேச்சுமொழி, ஆனால் தாயின் மணிக்கொடியைப் பாதுகாப்பதில் ஒன்றாகிப் போனவர்கள். சுப்பிரமணியனுக்கு உள்ளப்பூரிப்பில் பாடல் பிறக்கிறது அந்த வீரர்களைப் பற்றி.

செந்தமிழ்நாட்டுத் தீக்கண் மறவர்கள், சேரவீரர், துணிவுமிக்க தெலுங்கர், நாட்டுக்கே அணியான துளுவர் கன்னடர், சரி வீரர்கள் என்றால் அப்படித்தான் இருப்பார்கள் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் திராவிடர்களைப் பற்றி இப்படிப் பாடிவந்த சுப்பிரமணியன் வடவரின் அணிகள் வந்தவுடன் சுறு சுறப்படைகிறான். கவிதை அணிபெறுகிறது.

போரில் காலனுமஞ்சக் கலக்கும் மராட்டியர்––
இந்திரலோகத்துத் தேவர்களொப்ப அழகும் சிறப்பும்
உடைய இந்துத்தானத்து வீரர்கள்.
உலகம் அழியும் வரையும், போர்வீரம் உலகில் மறக்கப்
படும் வரையும், மாதரிடம் கற்பு நிலைக்கு மட்டும்,
பாரில் நிலைத்திருக்கப்போகிற இராசபுதனத்து வீரர்கள்

பாரதத்தின் கதாநாயகன் அருச்சுனனும், இன்னும் பல
வீரர்களும் பிறந்த வங்கத்து வீரர்கள்

என்று போற்றிப் புகழ்ந்து–வாரியணைத்து அடைமொழிகள் வைத்துப் பாடுகிறான். அதிலும் தலைமை ஆரியப் பார்ப்பானை "பொன்னகர்த் தேவர்களொப்ப இந்துத்தானத்து மல்லர்" என்று மற்றவர்களைவிட அவர்கள் உயர்ந்தவர்கள் என்ற பாணியில் பாடுகிறான்.

சுப்பிரமணியன் ஒரு பன்மொழிப் புலவன். சங்கத்தமிழை யும், வாலாற்றையும் கற்றுணர்ந்த மேதை. இலங்கைத்தீவு தமிழர் நாடென்பதும், ஆரிய விசயன் என்பவன் இலங்கை வந்தடைந்த கதைக்குப் பின்தான் சிங்களம் என்னும் இனம் தோன்றியதென் பதும், இந்த இனம் வளர்ச்சியடைந்திருந்த கி.மு களிலேயே இலங்கையின் தாழ்நிலம் முழுவதும் தமிழர்கள் செறிந்து வாழ்ந்தார்கள் என்பதும், தமிழ்ச்சங்கத்திலே ஈழநாட்டுப் புலவர்கள் பலர் இருந்தனர் என்பதும், இவன் அறியாததல்ல. இத்தீவு இலங்கை–ஈழம் என்றே பண்டை நூல்களிலெல்லாம் கூறப்படுவதும் இவன் அறிந்தது தான். அப்படியிருந்தும், பாரததேசம் என்கிற பாடலிலே இலங்கை–ஈழம் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல், புதியதோர் சொல்லைப் படைத்து சிங்களம் என்று பாடுகின்றான.

" சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்" என்று சுப்பிரமணியனுடைய நோக்கம்தான் என்ன? தமிழன்–தமிழ்நாடு–தமிழ்மண்–தனிநாடு என்கிற உணர்வை, வரலாற்றுணர்வைத் தமிழன் பெற்றுவிடக் கூடாது என்பது தான்.

இலங்கை சிங்களத்தீவு என்றாகிவிட்டால், வடவாரியக் கட்டுக்குள் இல்லாத அந்த மண்ணிலும் தமிழ் என்கிற தனி யுணர்வு தோன்றாதல்லவா?

என்ன சிங்களத்தீவா? அங்கே தமிழன் இல்லையா? அங்கிருந்த தமிழன் யார்? என்று நீங்கள் கேட்டுவிடக் கூடுமல்லவா, அந்தக் கேள்வியைத் தடுத்துவிடவேண்டும். இந்தக் குள்ளத்தனத்தைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு என்கிற பாடலிலே "சிங்களம் புட்பகம் சாவகம் ஆகிய தீவு பலவினும் சென்றேறி" என்று பாடிவைத்திருக்கிறான்.

புட்பகத்திலும் சாவகத்திலும் பிற்காலச் சோழர் காலத்திலே, கடல்கடந்து ஆட்சிப்பரப்பைப் பெருக்கியபோது குடியேறினான். ஆனால், ஆரிய இராமாயண–பாரதங்களைப் போற் றுகிற சுப்பிரமணியன், இராமாயண காலத்திலேயே மிக்க நாகரீக வளமுடைய தமிழரசு ஈழத்தில் இருந்தது. அதனுடைய மன்னன் இராவணன் என்னும் தமிழன் என்பதும், அத்தமிழ்நாடு கல்வி கேள்விகளால் உயர்ந்தது என்பதும் இவன் அறியாததல்ல.



அறிவான். அப்படியிருந்தும், இந்தியாவில் மட்டுமல்ல இலங்கைத்தீவிலும் கூட தாய்நாட்டுணர்வைத் தமிழினம் பெற்றுவிடக்கூடாது என்பதற்காக, சிங்களம் என்கிற தீவிலே தமிழன் சென்று குடி யேறினான், ஆகையினால் அது அவனுடைய சொந்த மண்ணன்று என்று வஞ்சகப் பொய்யுரைத்தான்.

சிங்களம் என்று எங்கும் எதிலும் குறிப்பிடப்படாத தமிழ் ஈழத்தை, தமிழர்களின் பூர்வீகத் தாய்நாடான ஈழத்தை, முதற் குமரித் தமிழ்மாந்தனின் மூதாதை–உலகின் முதல் மனிதன்–ஆதாம் தோன்றிய தமிழ் மண்ணை ((இத சம்பந்தமான ஆய்வை என்னுடைய "சைவசமயமும் சர்வமத சமாசமும்" என்னும் நூலில் காண்க)) சிங்களம் என்று கூறியிருக்கிறான்.

சிலசமயம் வாய்தவறிச் சொல்லிவிட்டானோ ! என்று மற்றவர்கள் கவனியாமல் விட்டுவிட்டாலும் என்றஞ்சி, அழுத்தித் தெட்டத்தெளிவாக இரண்டாம் தடவை "சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம்" என்று பாடுகின்றான்

மொழி

இந்தச் சுப்பிரமணியன் தமிழர்களை எமாற்ற வேறுபட்ட இரண்டு முறைகளைக் கையாண்டான். பாமரர்களை எமாற்றித் தன்கைக்குள் போட இலகு தமிழ்ப் பாடல்களை ஆவேசமாகப் பாடி எழுதிவிட்டு, தன்போன்ற ஆரியதாசர்களுக்கு தன் உள்ளக் கிடக்கையை மணிப்பிரவாளக் கடினநடையிலே கட்டுரைகளாக எழுதினான். இவனுடைய இந்தப் படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டதும் பார்ப்பாரச் சதிக்கூட் டத்தின் தலைமையகமான சுதேசமித்திரன் என்ற பார்ப்பனப் பத்திரிகை தான்.

மெல்லத் தமிழினிச் சாகும் மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும் என்றந்தப் பேதையுரைத்தான் என்று கவலை காட்டிக் கொண்டே தமிழைத் தன் எழுத்தால் சாக்காட்டை நோக்கித் தள்ளிக் கொண்டு செல்கிறான் தமிழுணர்ந்த சுப்பிரமணியன். கட்டுரையடங்கலும் மணிப்பிரவாள நடையில், வடசொற்களையும் வடவெழுத்துக்களையும் முடிந்தளவுக்குக் கலந்து எழுதியுள்ளான்

தமிழ் சாகாது.. இருந்தாலும் ஒரு கேள்வி. எப்போது தமிழ் மெல்லச் சாகும்? அதனுடைய தற்தூய்மை–தனித்துவம்–மொழியிலக்கணம் இழக்கப்படுகிறபோது. அப்படி இழக்கும் வகையில் தானே சுப்பிரமணியன் மொழிக்கலப்புச் செய்துள்ளான். தமிழிலே மெய்யெழுத்துக்கள் மொழிமுதலெழுத்தாக வருவ தில்லை. ஆனால், சுப்பிரமணியனோ வடமொழியைக் கலந்தது மட்டுமல்லாமல், எழுத்திலக்கணத்தையே தகர்த்து, மெய்யொலி முதலொலியாக வரும் சொற்களை ஏராளமாகக் கையாண்டு

தமிழைச் சிதைத்திருக்கிறான். தமிழும் சிதைகிறது. பாமர சனங்களும் படித்துப் பொருளுணரமாட்டார்கள். இரட்டைச்சதி.

உதாரணத்திற்குச் சில:-ஹிந்து, 'ஸ்வதந்திரம், க்ஷணத்திலே, ஜ்வரநோய், சஹசம், ப்ரதாபம், ஜீவனுக்கும், நிஷ்காரணம், வஸ்து, விவாஹம், சந்தோஷம், சந்யாஸி, ஸந்நியாசி, அக்ஷராப்பியாசம், யதேஷ்டம். இப்படி ஆயிரமாயிரம் சொற்கலப்புகள் இவனா? தமிழை வாழவைக்கவந்தவன்

மொட்டைமாடிக்கு மேனிலை முற்றம் என்றொரு புதிய இனிய தமிழ்ச் சொல்லை எழுதத் தெரிந்த சுப்பிரமணியன் தான் இப்படியும் எழுதினான்.

முடிந்தவரை எவ்வளவு வடமொழி எழுத்துக்ளையும், வடசொற்களையும் கலக்கமுடியுமோ கலந்து தமிழின் தனித்தன்மையை அழித்து, வடமொழிக்குள் சங்கமமாக்கிவிட விடாமல் முயன்றுள்ளான்.

சங்கீதவிசயம், என்னும் கட்டுரையிலே தமிழன் கண்டு ணர்ந்த நவரசங்களைப் பற்றிக் கூறப்புகுந்த சுப்பிரமணியன், நவ ரசங்களை வடசொற்களிலே கூறிவிட்டு விளக்கம் தமிழிலே தந்துள்ளான். அதாவது, நவரசங்களின் பிறப்பிடம் வடமொழி என்பதுபோல்.

உதாரணம்–பீமத்ஸ்வம்(வெறுப்பு) என்னே! இவனின் தமிழ்ப்பற்று.

கலைகள் கட்டுரையிலே தமிழை விஞ்ஞான பாசை யாக்கவேண்டுமென்று ஆசைப்படுகின்றான். நல்லாசை. உயர்ந்த ஆசை. தவறென்ன என்பீர்கள். ஆனால், அதற்கவன் கூறும் வழி தான் சூதுடையதாக இருக்கின்றது. "காசியிலே நாகரி பிராமண சபையார் ஐரோப்பிய விஞ்ஞானச் சொற்களுக்கு சமக்கிருதத் திலே சரியான சொற்களைத் தெரிந்தெடுத்து அகராதி தயாரிக் கிறார்கள். முடிந்தவரை அனைத்து இந்தியப் பாசைகளிலும் இச் சொற்களைக் கையாண்டால் நன்று. கலைகள் செழிப்பதோடு, தேசபாசைகளுக்குள் ஒற்றுமையும் உண்டாகும்.

வடவனிடம் தமிழை மட்டுமல்ல, அனைத்திந்திய மொழி களையும் அடக்கம் பண்ணமுயலும் சுப்பிரமணியனின் கபடநாட கம் தான் எத்துணைப் புத்திசாலித்தனமானது. கல்வி வழிதான் மொழி வளர்ச்சியடையும். அதுவும் இன்றைய கல்வி விஞ்ஞானக் கல்வி. எனவே, விஞ்ஞானக் கலைச்சொல்வழி மொழி வளர்ச்சி காணும். ஆகவே, இந்த இடத்தில் சமக்கிருதத்தை நுழைத்து விட்டால் தமிழ் வடமொழியைச் சார்ந்து நிற்பதாகிவிடும்.



இயற்கையோடிணைந்த–இயற்கைவழிப் பிறந்த மொழி தமிழ் என்கிறார்கள். அதனிடத்து இல்லாததொன்றில்லை அம் மொழியில் கலை வளர்க்க ஓட்டுமொழி ஒன்றிலிருந்து சொற்கள் கொண்டுவரப் போகின்றானாம் சுப்பிரமணியன். அத்தோடு நிற்காமல் இன்னும் மேலே போய், பெண்கள் விடுதலை என்னும் கட்டுரையிலே, இந்தியாவிலே பெரும்பான்மையான பாசைகள் சமக்கிருதத்தின் திரிபன்றி வேறில்லை. அங்ஙனம் திரிபில்லாத மொழிகளும் சமக்கிருதக் கலப்பினால் மேன்மை பெற்றன. தமிழ் இலக்கணம் பெரும்பாலும் சமக்கிருதத்தையே தழுவி எழுதப் பட்டது. என்று கூறுகின்றான்.

எப்பேர்ப்பட்ட பொய்யுரை! எத்தகைய தமிழ்த்துரோகம்!

ஆரியர்கள் மந்தைகளை ஓட்டிக்கொண்டு கைபர் கணவாய் வழியாக நாவலந்தீவுக்குள் நுழைந்த காலத்திற்கும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னரே, அதாவது, 1. கி.மு9940 வது வருடம் காய்சினவழுதி என்ற பாண்டியனால், முதலாவது தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டு தமிழாராய்ச்சி தொடங்கப் பட்டது. --- முதற்சங்கம் அமைந்து ஏறக்குறைய 8000 ஆண்டு களின் பின் தமிழகத்துள் நுழைந்த இடையர்களின் மொழித் திரிபாம் தமிழ். விந்தையிலும் விந்தை இது.

நகைப்புக்கிடமான இந்த நச்சுரையைக் கேட்டுக் கொண்டு, இன்றுவரை இந்தப் பார்ப்பாரச் சுப்பிரமணியனை, பாரதி என்று கொண்டாடி மகிழ்கிறதே தமிழகம்–தமிழகம் மூடர்களால் நிரம்பிவிட்டது போலும்.

வீரத்தால் வீழ்த்த முடியாத தமிழனை, சாதி சமயச் சதிகளினால் வீழ்த்தி, தமிழையெடுத்துத் தங்கள் விலங்குப் பாசையுள் கலந்து சமக்கிருதத்தை உருவாக்கி, அதைக் கடவுட்பாசை எனக்காட்டி, பொய்யும் புனைவும் கொண்ட புரா ணங்களைத் தயாரித்துத் தமிழ் வாழ்வுக்குள் புகுத்தி, இயற்கை வழி நின்ற சிவநெறியை இந்துமதம் என்ற ஆபாசக் கிடங்காக்கி தமிழனின் சிந்தனைக் கருவூலங்களை தமக்கேற்றவாறு மாற்றங் களுடன் வேதமாக்கி, அதனுள் சாதி–காமம்– பெண்ணடிமை இவற்றை நிரப்பி, இந்துசமயம் உயர்ந்தது, சமக்கிருதம் உயர்ந்தது என்று கூறுகிற வடவர், மாடு மேய்த்துக் கொண்டு நுழைந்த காலத்தில் மட்டுமல்ல கௌதமபுத்தர் காலத்தில் (கி.மு 500களில்) கூடத் தமக்கொரு சமயம்– வாழ்க்கைமுறை அற்றவராய், வேள்வித் தீயை வணங்கி அதிற் கொன்ற விலங்கின் இரத்தத்தைக் குடித்து, தசையைப் புசித்து, மதுவை மாந்தி இதை வாழ்வு என்று வாழ்ந்தவர்கள். இது உலகம் அறிந்த பரகசியம். இந்தப் பரகசியத்தைச் சுப்பிரமணியன் மறந்து

போனானா? இல்லை. அவனுடைய பார்ப்பாரப் புத்தியும்-பக்தியும் அப்படிச் சொல்லவைத்தது. மூடத்தனத்தில் ஆழ்ந்து கிடந்த தமிழனும் ஒப்புக்கொண்டான்.

சூழ்வினை வசத்தாலும் சூழ்ச்சித் திறத்தாலும் உயர்ந்தவனாகிவிட்ட ஆரியரின் மற்றொரு வடிவம் தான் தமிழகத்துப் பார்ப்பார். அதனால், சாதிப்பற்றால்-அதைத் தொடர்ந்து காப்பாற்ற, ஆரியச்சூழ்ச்சியைப் பயன்படுத்தினான் சுப்பிரமணியன்.

தூரதிட்டவசமாக வடவனின் சூழ்ச்சிக்கு மனோரீதியாக அடிமையாகிவிட்ட தமிழனிடம், பொய்யால் புனையப்பட்ட புராணங்களை எடுத்துக்காட்டி, தமிழை-ஆதிசிவன் பெற்றுவிட்டான் ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர் வேதியன் (பிராமணன்) கண்டு மகிழ்ந்து எழில் மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான். என்று புராணப்புளுகை மெய்யாக்கினான். பார்ப்பபனியச் சூதுமதித் திறன்தான் என்னே!

பண்டைய இலெமூரியத்(கோண்டுவானா-காண்டாவனம்) தமிழனால் மொழியும், நாகரீகமும் குமரியிலிருந்து சுமேரியா வரை வளர்க்கப்பட்டு, நடுக்காலப் பகுதியிலே ஆப்பிரிக்கத்திற்கும் ஐரோப்பாவுக்கும் உலகம் முழுமைக்கும் பரப்பப்பட்டு, அவ்வழி சிவநெறியும் உலகம் முழுமைக்கும் பாவியிருந்தது. இது வாலாறு இந்த வாலாறு சுப்பிரமணியன் காலத்திலேயே ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தது. அந்த வரலாற்று உண்மைகளை மக்களுக்கு உணர்த்துவதற்காக தமிழகத்தில் அறிஞர்கள் பகுத்தறிவுப்புரட்சி நடத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால், இன்று விஞ்ஞானம் முற்றுமுழுதாக உறுதிப்படுத்தியுள்ளது.

கன்னடம்-தெலுங்கு-மலையாளம்-துளு ஆகிய மொழிகளின் பிறப்பிடமாகத் தமிழ் இருந்தது. ((கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும் உன்னுதிரத் துதித்தெழுந்து ஒன்றுபலவாயிடினும்-மீனாட்சி சுந்தரனார்-தமிழ்த்தாய் வணக்கம்)) இன்னும் பல ஆசிய மொழிகளான மலாய்-பகசா-தாய் போன்ற மொழிகளின் அடிச்சொற்களும் ஆப்பிரிக்க-ஆத்திரேலிய பழங்குடி மக்களின் மொழியும் தமிழாகவும், தமிழிலிருந்து பெறப்பட்டதாகவும் காணப்படுகிறது.((பார்க்க-மலாய் மொழியில் தமிழ் மரபுகள்-போராசிரியர்.வீரப்பன்)) இன்று சான்றுகளுடன் கூடிய சுமேரிய நாகரீகம் தமிழர்களுடையது என்பதும், அதன் தலைநகாம் ஊர் என்னும் பெயருடையது என்பதும், இந்தச் சுமேரியாவிலிருந்து ஆப்பிரகாமின் புறப்பாட்டிலிருந்து உலகநாகரீகம் பரவியது என்பதும் வரலாற்று உண்மை. இந்த ஊர் என்னும் சொல்லை வேர்ச் சொல்லாகக் கொண்டு உலகம் முழுவதும் நகரப்பெயர்கள் அமைந்துள்ளன.



((இதுபற்றிய விளக்கத்தை எனது-சைவசமயமும் சர்வமத சமரசமும் என்ற நூலில் காண்க)) இதையெல்லாம் மறந்து-மறைத்து சுப்பிரமணியன் கூறுகின்றான், ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பிற இடங்களிலும் காணப்படுகின்ற நாகரீகங்களுக்கு எல்லாம் மூலாதாரமாக நிற்பது, ஆரிய நாகரீகமாம்.

எத்தகைய அசட்டுத் துணிச்சல் வேண்டும் இப்படிச் சொல்ல. இப்படிச் சொல்லிவிட்டு அன்றைய நாட்களில் தமிழகத்தின் பெரும்புலவனாய் இருந்தானென்றால், அற்றைத் தமிழர்களின் மடமையும், அடிமைத்தனமும் தான் எத்தகையது.

ஆரியர்கள் நாவலந்திவினுள் நுழைந்து நீண்டகாலத்தின் பின்தான் வேதங்களை எழுதினார்கள். இது திராவிடத் தொடர்பினால் பெற்ற திறனாகும். அதற்கு முன்னால் அவர்கள் எழுதும் திறனைப் பெற்றிருக்கவில்லை. இந்த ஆரியர்களின் மற்றொரு பிரிவு ஐரோப்பிய மண்ணுள் நுழைந்தது. இயேசு அவதரிக்கிறபோது கூட இவர்கள் நாகரீகப்படவில்லை எனவே, ஆரியர் இந்தியாவில் தான் நாகரீகப்பட்டார்கள் என்பது தெளிவு. சேர்மானியர் தம்மை ஆரியர் என்று அழைத்துக் கொள்வதும் வடவருடைய சுவத்திகா சின்னத்தையே தம் சின்னமாகவும் கொண்டுமுள்ளனர். (சுவத்திகா பற்றி பிறிதோர் சமயம் காண்போம்) வட இந்திய ஆரியர்கள் வேதத்தை எழுதியபோது கூட ஐரோப்பியர்கள் கல்வியறிவைப் பெற்றிருக்கவில்லை. ஆகவே, ஆதியில் ஆரியர்கள் ஒரே கூட்டமாக இருந்தபோது அவர்களிடம் சிந்தனைத் திறன் வளர்ந்திருக்கவில்லை. இந்தியாவில் தமிழைக்கற்றே சிந்தனை வளத்தையும் மொழியாற்றலையும் பெற்றான். இந்த வாலாற்றின் மற்றொரு வடிவப் புரட்டல் தான் தமிழுக்கு அகத்தியன் இலக்கணம் எழுதினான் என்ற புராணப் புளுகு.

குமரிக்கண்டத்தின் மீதேற்பட்ட கடற்கோளின்போது தப்பிப் பிழைத்த தொல்காப்பியம், 1-கி.மு 8000 மளவில் சமய கீர்த்தி- நிலந்தருதிருவிற் பாண்டியன் எனப்புகழப்பட்ட நெடியோன் காலத்தில் இயற்றப்பட்டது.

அதாவது ஆரியநுழைவுக்கு சுமார் ஆறாயிரம் ஆண்டுகள் முன்பு. ஆனால் தொல்காப்பியத்தில் இன்று காணப்படுகின்ற வடசொற்களை வைத்தும், தமிழின் நால்வகைச் சொற்களில் வடசொல் ஒன்று எனச் சொல்லப்பட்டிருப்பதைக் கொண்டும், தொல்காப்பியம் கடைச்சங்கப் பிற்காலத்தைச் சேர்ந்தது வடமொழியிலிருந்து பல மூலச்சொற்கள் தமிழுக்கு வந்தன என்று கூறுவது, ஆரியத்தின் திட்டமிட்ட வரலாற்றுச் சதியாகும்.

---

ஆலவாயழகன்-செகசிற்பியன்.

பரிமேலழகன் முதல் சாமிநாதையர் வரையான பார்ப்பாரக்கூட்டம் பழந்தமிழ் நூல்களில் செய்த ஒட்டுவேலைகள் திரிபு வேலைகள், கற்பனையுரைகள் மூலம், வடவாரிய பார்ப்பாரக் கருத்துக்களை புகுத்தியதைப்போல், தொல்பழந் தொல்காப்பியத்தில் வடசொற் களைப் இடைச்செருகிவிட்டனர் என்பதை, தமிழறிஞர்கள் சிந்திக்காதது ஏன்?

கற்பென்றால் கடைச்சரக்காக கருதுகின்ற ஆரியத்திடம் தமிழ் இலக்கணம் பெற்றதென்றால், களவு-கற்பெனும் இருவழித் தூயகாதல் வாழ்க்கைநெறி அகம் என்ற துறைக்குள் எவ்வாறு தமிழிலக்கணத்தில் இடம்பெற்றது. தமிழினம் நன்கு சிந்திக்கவேண்டும்.

பாரப்பாரச் சுப்பிரமணியன் என்னடாவென்றால், வேத காலச் சமக்கிருதத்தில் இருந்து தமிழிலக்கணம் பெற்றது. ஆரியசம்பத்துகளில் இருந்து தமிழ் நாகரீகம் பிறந்தது என்று பிதற்றுகிறான்.

கல்விபற்றி

தமிழ்நாட்டு மக்கள் படிப்பறிவின்றி பாமரர்களாக-விலங் குகளாக பான்மைகெட்டு வாழுகின்றார்கள். அவர்கள் நாகரீகப் படவேண்டும்-மூடநம்பிக்கைகளிலிருந்து விடுபடவேண்டும். அதற்குப் பாந்தளவில் கல்வி கற்பிக்கப்படவேண்டும்.

வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி
நகர்கள் தோறும் பலபல பள்ளிகள்
வீடுகள் தோறும் கலையின் விளக்கம்.

இப்படி ஆசைப்படுகின்றான் சுப்பிரமணியன். நியாயம்-நல்லெண் ணம்-அதிலென்ன தவறு என்று கேட்பீர்கள். உண்மைதான். பள்ளிக்கூடங்கள் அதிகரித்தால், கல்வி பெருகும்-கலைகள் மலரும். அத நன்று. ஆனால் , அந்தப் பாடசாலைகளில் கல்வி வளர்ச்சியடைய என்னென்ன வழிமுறைகள் கையாளப்படவேண்டும் பாடங்கள் என்கிற கட்டுரையிலே பாடத்திட்டத்தையும் சுப்பிர மணியனே தந்திருக்கிறான். எப்படி?

வேதகாலச் சரித்திரம்-புராணகாலச் சரித்திரம்-பௌத் தகாலச் சரித்திரம்-இராசபுதனத்தின் சரித்திரம் ஆகியவை சிரத்தையுடன் கற்பிக்கப்படவேண்டும். அசோகன்-விக்கிர மாதித்தன்-இராமன்-லஷ்மணன்-தர்மபுத்திரன்-அர்ச்சுனன். ஆகிய இவர்களுடைய சிறந்த குணங்களை மாணவர் மனதில் பதியும்படி செய்யவேண்டும்.((இவை சுப்பிரமணியனின் நேர் வரிகள்))

எப்படிப்பட்ட அருமையான யோசனைகள், பார்த்தீர்களா? வேதம் முதல் இராசபுதனம் வரை ஆரியச்சரித்திரம். அசோகன் முதல் அருச்சுனன் வரை ஆரியக்கதாநாயகர்கள் பற்றியும் கற்பிக் கப்படவேண்டும். அதுவும் ஒருத்தனும் தவறிவிடாமல் வீதிகள்



தோறும் இரண்டு பள்ளிகள் அமைத்து அனைவருக்கும் கல்வி என்ற பெயரால் மூளைச்சலவை செய்யப்படவேண்டும். எத்தகை க்கொடுமதி-பார்ப்பாரச் சூது.

தமிழர்கள் கற்கவேண்டிய பாடத் திட்டத்திலே தமிழர்களைப் பற்றியே பேசப்படவில்லை. அதாவது கல்வித் திட்டத்தால் தமிழர் விழிப்படைந்துவிடாமல் இருக்க, பார்ப்பனீய த்தின் கீழ் அடங்கிக் கிடக்க, வடநாட்டுக், கல்வி மூலம் மூளைச்சலவை செய்யப்படவேண்டும்.

இமயத்தில் புலி பொறித்த கரிகாற்பெருவளத்தானை-இமயவாம்பன் சேரலாதனை-தமிழைப் பழித்தவனின் தலையிலே இமயத்தக் கல்கொணர்ந்து கடவுள் மங்கலம் செய்த சேரன் செங்குட்டுவனை, நீதிக்கு உயிர் கொடுத்த நெடுஞ்செழியனை-துறவுக்கும்-பாசத்துக்கும் இலக்கணம் வகுத்த இளங்கோவடி களை-கடையேழு வள்ளல்களை-சங்கத்தமிழ் கூறும் சான்றோர் களை, உத்தமபுருடர்களை-திருக்குறள் முதலான எண்ணற்ற தமிழ்ச் சிந்தனைக் கருவூலங்களை-வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட இடைக்காலத் தமிழகத்தின் ஈராயிரம் ஆண்டுகால வாலாற்றை-இப்படி தமிழர் வரலாற்றில் நிறைந்து கிடக்கும் உயர்வுகளை பற்றிச் சுப்பிரமணியன் மறந்தா போனான்?

இவற்றையெல்லாம் பற்றித் தெரிந்துகொண்டால் தமிழன் பார்ப்பனியத்திடம் அடிமைப்பட்டுக் கிடக்கமாட்டான் அல்லவா? எத்தகைய சதிகார ஆலோசனைகள்.

மனைவியைச் சூதாட்டப் பொருளாக வைத்துச் சூதாடிய மானங்கெட்ட தருமனை-ஒருத்தியையே ஐந்து சகோதரர்களும் பெண்டாட்டியாக வைத்திருந்தார்களே, அந்தக் கேடுகெட்ட விலங்காண்டிகளைப் பற்றி-தன்மனைவியின் மானம் பறிபோவதை பார்த்துக்கொண்டிருந்த கோழைகளைப் பற்றி-தனக்குப் பௌத்ததர்மத்தின் மீது பிறந்த பற்றுக்காக தன் பிள்ளைகளான மகிந்தனையும் சங்கமித்தயையும் மொட்டையடித்துத் துறவி களாகச் செய்த கிழட்டு அசோகனைப் பற்றி, தர்மம்-பொறுமை-ஞானம் என்கிற பெயரால் கற்பிக்கவேண்டும். தமிழர் வாழ்வறம் சிதைவதற்கு வேண்டிய பாடத்திட்டம்.

அண்ணன் மனைவியை அன்னையாய் மதிக்கிற தமிழர் பண்பாட்டை, பிறர்மனை விழையாமை என்கிற உயர்பண்பாட்டில் நிலைத்த தமிழியத்தை, சீரழிக்க வேண்டுமல்லவா? அப்டிச் சீரழித்தால் தானே ஆரியம் வாழ வழிபண்ணலாம்.

எப்போப்பட்ட தீய திட்டங்களைப் பார்ப்பனியத்தைப் பாதுகாப்பதற்காகப் புகுத்தினான் சுப்பிரமணியன். அது மட்டுமல்ல, ஆரியரும் தமிழரும் மிகப்பழங்காலத்திலேயே இந்து

மதம் என்ற கயிற்றால் கட்டப்பட்டு ஒரு கூட்டத்தாராயினர் என்ற செய்தி, பூமண்டலத்தின் சரித்திரத்தில் விசேசமும் . நலமும் பொருந்திய காலம் என்று கூறுகின்றான். எவ்வளவு தூரம் தமிழரின் தனித்துவத்தை அழித்துவிட, ஆரியத்துள் கலந்துவிடத் துடிக்கிறான் என்பதை இவ்வரிகள் காட்டுகின்றன.

இந்துமதம் என்றொரு மதம் அன்றும் இல்லை. இன்றும் இல்லை. இல்லாத மதமொன்றின் பெயரால் தமிழர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறான் வடவன்.

மடாதிபதி சங்காரச்சாரியார் கூறினார், லோகத்தின் எல்லாமதங்களும் மதத்தின் பெயராலும் அம்மதத்தின் வேதப் பெயராலும் ஒன்றுபட்டிருக்கின்றன. உலகம் முழுவதும் பைபிளால் கிறீத்தவமும், குர்ஆனால் இசுலாமும் ஒன்றாகக்கட்டப்பட்டுள்ளன நம்முடைய இந்தியச் சமயம் தான் ஒன்றின் கீழ் கட்டுப்படாமல் பிரிந்திருக்கின்றன. நல்லகாலம் வெள்ளைக்காரன் நம்நாட்டை ஆண்டபோது, இந்தியச் சமயமெல்லாம் இந்துசமயம் என்று ஓர் சொல்லால் சொல்லிவிட்டான். அந்தச் சொல்தான் இன்று நமது சமயத்தின் ஒருமைப்பாட்டைக் காத்து வருகின்றது என்று. பார்த்தீர்களா! வெள்ளைக்காரன் ஆறு இந்தியச் சமயங்களின் வேறுபாட்டை அடையாளம் காணமுடியாமல், இந்தியாவின் சமயம் இந்துசமயம் என்று கூறியதை வசதியாகப் பிடித்துக்கொண்டு, இல்லாத இந்துமதத்தினால் மக்களை மடக்கி வைத்திருக் கிறான். இல்லாத இந்து என்ற சமயத்தை மிகப் பழங்காலத் திலேயே இருந்தாக எழுதுகின்றான் சுப்பிரமணியன். தமிழன் வீழ்ந்தது சமயத்தால்தான். அதை இறுக்கிப் பிடித்தால்தானே வீழ்ந்தவனை எழாமல் வைத்துக்கொள்ளலாம்.

## இந்திய சுதந்திரப் போராட்டகாலம்

ஐரோப்பிய அட்டூழிய ஆதிக்கத்தில் இருந்து விடுபட, இந்தியாவில் வாழ்ந்த ஒவ்வொரு மனிதப் பிறவியும் முனைந்து நின்ற காலம். விலங்கிலும் இழிந்தவர்களாய்ச் சுதேசிகள் அடிமை ப்பட்டிருந்தகாலம். அதனால் பதினெட்டு இனத்துமக்களும் ஒன்றுபட்டு நின்றனர். சாதி-இனம்-மொழி-சமயம் மறந்து ஒன்று பட்டு நின்றனர். அடக்கு முறையால் எழுந்த வேகம் அது. ஆனால், சுதந்திரம் கிடைக்கிறபோது, நாடு விடுபடுகிறபோது, தனித்தனியாக இனங்கள் சுதந்திரமாகப் பிரிந்து போயிருக்க வேண்டும். அதுவே முறைமை-அதுவே நியாயம். ஆனால் சுப்பிர மணியனோ ஆரியனுடைய கையிலே அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்கத் தன்னால் முடிந்தளவு முயன்றுள்ளான். அந்த முயல்வில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறான்.

இன்று இந்தியாவிலும்-இலங்கையிலும் விடுதலைப் போராட்டங்களும், அதன்விளைவான படுகொலைகளும் இனப்



படுகொலைகளும் நடைபெற்றுக்கொண்டிருப்பதற்குக் காரணம், விடுதலையடைந்தபோது இனங்கள் தன்னிச்சையாகப் பிரிந்து போகாமல் தடுக்கப்பட்,டதேயாகும்.

இந்தக் கைங்கரியத்தைச் செய்தவர்களில் முன்நின்றவர் மகாத்மா காந்தி. எப்படியும் ஆரியரிடம் ஆட்சியைப் பெற்றுக் கொடுத்துவிட வேண்டும். பெற்றுக் கொடுத்துவிட்டால் ஆரியச் சதி முறைகளாலும், வேதச்சமய முறைகளாலும் ஆட்சியதி காரத்தை இறுக்கிப் பிடித்துக்கொள்ளலாம். மீறிப்புறப்பட்டாலும் இருக்கிறதே இந்துமதம், அதைக்காட்டி அடக்கிவிடலாம். இது இந்தியாவில் உள்ள எல்லாச் சமயத்தாரையும் அடக்கிவிடக் கூடிய இலகுவழி. ஆனால், முசுலீம்கள் இந்துக் கட்டுக்குள் அடங்கமாட்டார்கள். அவர்களுடைய(குர்ஆன்) வேதபாசையும் வேறு. இந்நிலையில் முசுலீம்கள் ஆரியர்களிடம் அடங்காமல் புரட்சி செய்தால், முசுலீம் நாடுகளின் ஆதரவும் கிடைக்கும். இதைத்தொடர்ந்து மற்றைய இனங்களும் புரட்சி செய்ய முயலக் கூடும். இப்படியொரு நிலை இந்தியின் கையில் ஆட்சியதிகாரம் இருப்பதற்கு இடையூறாகும். அந்நிலை தோன்றாமலிருக்க இசுலாமியரைப் பிரித்துவிட வேண்டும். பிரித்துவிட்டால் ஆரியர் இந்தியாவை எப்போதும் தம் இடுக்கிப் பிடிக்குள் வைத்துக் கொள்ளலாம். இதனைத் தீர எண்ணியே காந்தி ஆயிரம் கற்களுக்கு மேல் இடைத்தூரம் உள்ள இரண்டு நிலப்பகுதி களை பாகித்தான் என்கிற ஒரு நாடாகப் பிரிந்துபோக அனுமதி வழங்கினார். இது புரியாத மற்றொரு ஆரிய-இந்துமத வெறியன் நாதுராம் விநாயகக் கோட்சே, காந்தி ஆரியனுக்குத் துரோகம் செய்துவிட்டதாக எண்ணி அவரைச் சுட்டுக்கொலை செய்தான். இந்தக் காந்தியைத்தான தமிழர்கள் தாசத்தனத்தால் மகாத்மா என்று கொண்டாடுகிறார்கள்.((காந்தியைப் பற்றி தனியொரு இதழில் ஆராயப்படும்)) இத்தகைய சூழ்ச்சிக்காரர்களை ஏற்றிப் போற்றுவான் சுப்பிரமணியன்.

இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக பல்வேறு மாநில ங்களிலும் தம்மை அர்ப்பணித்த தியாகிகள் ஏராளம். அவர்களைத் தன் கவிதைகளால் ஏற்றிப் போற்றினான் சுப்பிரமணியன்:

காந்தி-குருகோவிந்தர்-தாதாபாய்-லாஷ்பதி-பூபேந்திரர் -லோகமான்யதிலகர் இவர்களைப் பற்றியெல்லாம் பக்கம் பக்கமாகப் பாடினான். இவர்களைவிடச் செயற்றிறன் காட்டிய தியாகிகள் தமிழகத்தில் இருந்தார்கள், அந்தத் தமிழ்த் தியாகி களைப்பற்றி எந்தளவுக்கு அக்கறைகாட்டினான் இந்தக்கவிஞன்.

இந்திய சுதந்திரப் போராட்தை வெல்லும் வழிகளில் சிறந்தது, அந்நியரின் பொருளாதார முயற்சிகளை முடங்கச்

செய்து-வருவாய் மூலங்களைத் தடைசெய்வதே என்றுணர்ந்து, ஆங்கிலேயனின் கப்பல் வாணிபத்தைத் தகர்க்க கப்பல்கம்பனி அமைத்து, அதன் பயனாகக் கப்பலோட்டிய தமிழன் என்றழைக் கப்பட்டவர் வ.உ.சிதம்பரப்பிள்ளை ஆவார். சட்டத்துறை அறிஞர். இக்கப்பல்கம்பனி அமைத்தமையினால் மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளால் சிறையிடப்பட்டு, அவருடைய இறுதிக் காலம் வரை சிறையில் செக்கிழுத்துச் சித்திரவதைப்பட்டாரே- செக்கிழுத்த செம்மல் எனப் போற்றப்பட்டாரே, அந்தப் பெருந் தகையைப் பற்றி, ஐஞ்சீரடி நான்கு கொண்ட ஒரு பாடலால் மட்டுமே அவரைப் போற்றிப் பாடிவிட்டு, அவர் புகழ் பேசாத வேறொரு பாடலில் வெள்ளையனும் அவரும் உரையாடுவதுபோல் பாடி மறைத்துவிட்டான். அதுவும் அந்த நான்கடிப் பாடலில், பார்ப்பனர் போற்றும் வேதவருணத்துள்-வ.உ.சி பிராமணன் அல்ல, கடைவருணத்தவரான சூத்திரன் என்று காட்டும் பொருட்டு வேளாளன் சிறை புகுந்தான் என்று பாடத்தொடங்கு கிறான். வேளாளன் -சூத்திரன் அல்லவா? வேறு தமிழ் தியாகிகளைப் பற்றி இவன் பாடியதாக நான் அறியவில்லை. வ.உ.சி யுடன் தோளோடு தோள் சேர்த்து நின்று, அந்நியப் பொருள் மறுப்பு-கதராடை இயக்கம்-தனித்தமிழ் எழுத்துப் பேச்சுப் போட்டிகள்போன்றவற்றை நடாத்தி, அதன் பயனாக சிறைக்கொடுமைக்காளாகி, தொழுநோய் கண்டு மாண்டானே சுப்பிரமணியசிவா என்றோர் மறவன், அவனைக் கூட இவன் பாட மறந்துபோனான் போலும்.

இந்த உண்மைகளையெல்லாம் உணருகிறபோது உங்களுக்குச் சினம் பற்றியெழவில்லையா? இந்தப் பார்ப்பாரக் கவிஞனை நாம் போற்றிப்பாடிக் கொண்டிருக்கிறோம் என்று வெட்கம் வர வில்லையா?

இவ்விதமாகப் பார்ப்பாரச் சுப்பிரமணியன் ஆரியச் சதி காரர்களுடன் கூட்டுச் சேர்ந்து மக்களை மடையர்களாக்கி இந்து மதக் கட்டுக்குள் வைத்திருக்க முயன்றுகொண்டிருந்த காலத்தில், திராவிடர் கட்சி தோன்றி, வடவனுடைய புராணப் புளுகுகளை மக்களுக்கு எடுத்து விளக்கி பகுத்தறிவுப் போர் நடாத்தியது. மக்கள் விழிப்புணர்ச்சி அடையத்தொடங்கினார்கள்.

ஆரியருக்கு எதிரான காரியமாற்றும் திராவிடர் கட்சியை எதிர்க்க வேண்டிய கட்டாயம் சுப்பிரமணியனுக்கு ஏற்பட்டது. எனவே, "திராவிடர் கட்சி" என்ற பொய் மேளக்கச்சேரியை ஆதரிக்காது காங்கிரசுக் கட்சியை ஆதரிக்குமாறு பிரச்சாரம் செய்தான். இவன்தான் பகுத்தறிவுப் பிரசாரம் செய்தவன் என்கிறார்கள்.



புராணங்கள் என்ற கட்டுரையிலே இந்தப் பகுத்தறிவுப் பாவலன்-புராணங்களை நம்பும்படி மக்களைக் கோருகின்றான். முன்னுக்குப் பின் முரணாக, சனங்களின் மூடநம்பிக்கைகளைக் கண்டு நெஞ்சு பொறுக்குதில்லையே-பேய்கள் என்பார் -அந்தக் குளத்தில்-இந்தமரத்தில்- அஞ்சிச்சாவார் என்று பாடுகிறான். புராணத்தை நம்புகிறவன் அஞ்சத்தானே செய்வான். அப்படி அஞ்சி அஞ்சித்தானே ஆரியனிடம் அடிமைப்பட்டான் தமிழன்.

பாரதநாடு என்கிற பாடலிலே, வேதியராயினும் ஒன்றே- வேறு குலத்தினராயினும் ஒன்றே என்றும்-சுதந்திரப்பள்ளிலே பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சு என்றும்-விடுதலையில் பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும்-பரவரோடு குறவருக்கும் எல்லாச்சாதிக்கும் சாதிக்கட்டிலிருந்து விடுதலை. என்று பாடினான். ஆகா! இந்தவிடுதலை ஆனந்தமானது. இவ்விடுதலை அடைந்த சமுதாயம் உயர்வானது தான். ஆனால், புராணங்கள் கட்டுரையிலே, இதே சுப்பிரமணியன் -இந்த சாதிமுறையைத் தர்மமாகக் கொண்ட -சாதிமுறையை நிலைநிறுத்தி ஏமாற்றி வாழுகிற பிராமணர்களின் ஊன்றுகோலான வேதத்தை முன்னிலைப்படுத்தி, "பிரமாண்டமான முறையிலே வேதப்பிரச்சாரம் செய்து" சனங்களை வேதத்துள் கட்டுப்படுத்து மாறு ஆரிய-வடமொழி அறிஞர்களை வேண்டுகிறான்.

அதுமட்டமல்ல, சாதியமைப்பை எதிர்த்துப் புரட்சிப் பாடல்கள் பாடிய சுப்பிரமணியன். தன் கட்டுரைகளில் இடம்பெறும் பாத்திரங்களை வட்டாரச் சாதிப் பெயர்களினாலேயே அழைத்தி ருப்பது மாபெரும் உண்மை.

மதம் தமிழர்களை அடக்கியாள்வதற்குச் சிறந்தவோர் ஆயுதம் என்பதைக் கண்டுணர்ந்து சுப்பிரமணியன் வாழ்வியலின் புறக்கூறுகளைக் கூட, இறைவனிடம் மன்றாடிப்பெறும் தாசமனப் பான்மையை-இயலாத்தன்மையை தமிழர்களிடையே பாப்பும் அடிக்கரு கொண்ட பக்திப் பாடல்களைப் பாடினான்

சுதந்திரம் என்பது தன்னுரிமையைத் தான் நிலைநாட்டு வது. போராடிப் பெறவேண்டியது. ஆனால் இவனோ சுதந்திரத்துக்காக இறைவனிடம் மன்றாடுகின்றான்.

நீயும் அறமும் நிலைத்திருப்பது மெய்யானால், ஓயுமுனர் எங்களுக்கு ஒருவரம் நல்கு.- சுதந்திரப் பயிர் கருகத் திருவுளமோ?

என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்-பஞ்சமும் நோயும் நின்னடியார்க்கோ ? பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ- தஞ்சமடைந்தபின் கைவிடலாமோ?

அகவாழ்க்கையிலும்—காணிநிலம் வேண்டும்—தூணிலழகிய மாடம் வேண்டும்—பக்கத்திலோர் பத்தினிப் பெண் வேண்டும்—கனக்குஞ் செல்வம் நூறுவயது இவையும் தர நீ கடவயே!

சமூகக் கடனைக் கூறும்போதும்—அன்னசத்திரம் ஆயிரம் வைப்பதிலும் ஒரு ஏழைக்கு எழுத்தறிவித்தல் புண்ணியம்

என்றிவ்வாறாக, எதிலோ—யாரிடத்திலோ சார்ந்து நிற்கிற இயலாமையை—தாசமனப்பான்மையை—மன்றாடிப் பெறுகிற அடிமை மனப்பான்மையை—மற்றவர்களிடமிருந்துதான் எதையும் பெற்றாகவேண்டும் என்கிற சுயசார்பற்ற தன்மையை—எதையும் கடவுளிடம் மன்றாடிப்பெறலாம் சுயவுழைப்புத் தேவையில்லை என்கிற சோம்பேறித்தனத்தை—இவற்றால், பயந்து—பணிந்து—. குனிந்து போவதையே தன் தோத்திரப் பாடல்கள் மூலம் தமிழனுக்கு ஊட்ட முயன்றுள்ளான். வெற்றியும் கண்டுள்ளான். இவனா? சமூகப்புரட்சி செய்கிற சீர்திருத்தக்காரன்.

சுப்பிரமணியன் ஒரு மதவாணன் அல்ல. ஆனால் அவன் பாடிய பாடல்களில் அதிகமானவை மதம் சம்பத்தப்பட்ட பாடல்களாகவே உள்ளன. அவனுடைய உள் நோக்கம் அதுதான்.

சமூகத்திலே காணப்படும் சீரழிவுகளைப்பற்றி வெடித்துக் கிளம்பும் சில பாடல்களைப் பாடி, ஆகா! சுப்பிரமணியன் மகாகவி என்று மக்கள் மனங்கொள வைத்து, எதைச் சுப்பிரமணியன் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளும்படியான நிலையை உருவாக்கிய பின், மக்களை ஆரிய அடிமைகளாக்கும் சமய—தேசபக்த—புராணப்பாடல்களைப் பாடினான்.

எந்தத் திக்கால் நோக்கினாலும், சுப்பிரமணியக் கவிஞன். தன்னம்பிக்கையற்ற—சோம்பேறித்தனமான—உழைப்பூக்கம் குறைந்த—எதையோ சார்ந்து நிற்கிற—பண்புகளைச் சமூகத்தில் வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டு பாடியுள்ளான் என்று தெரிகின்றது.

—காணிநிலம் வேண்டுமாம் அதற்கு ஒரு படம் போட்டுப் பராசக்கதியிடம் விண்ணப்பிக்கிறான்.
—சமுதாயம் சீர்திருத்தப்பட வேண்டும் நல்லதோர் வீணை செய்து நலங்கெடப் புழுதியில் எறியப்பட்டுள்ளது.
இவற்றைச் சீர்செய்து மாநிலம் பயனுற வாழ வல்லமை கேட்கிறான் பராசக்தியிடம்
—தானம்—தவம்—கல்வி—மானம்—வீரியம்—ஆண்மை—காளி தருவாள் என்கிறான்

இப்படி பல நூற்றுக்கணக்கான இடங்களிலே, மனித முயற்சியை—ஆண்மையை—செயல் வீரத்தைப் பின் தள்ளி, எல்லாம் கடவுள்



செயல் என்கிற புன்மைத் தனத்தை மக்களிடயே பாப்பி—தலை ஆட்டும் செம்மறியாட்டுத்தனத்தை வளர்த்திருக்கிறான் இவன். கடைசி கடவுளையும் கையாலாகதவன் என்றாக்கியது தான் இவன் தமிழர்களுக்குக் காட்டிய கடவுள் வழி.

இன்னும் எண்ணற்ற ஆதாரங்களின் மூலம் சுப்பிரமணியனின் தமிழ்த்துரோகத்தை வெளிப்படுத்த முடியும். நீங்களே படித்துத் தெரிந்துகொள்ள விடப்பட்டுள்ளது.

இனியாவது தமிழ் மக்கள் சுப்பிரமணியனுடைய பாடல்களையும், கட்டுரைகளையும் படித்துணர்ந்து, அவனைத் தமிழ்க் கவிதையுலகிலிருந்து நீக்க அல்லது அவனுடைய கவிதைகளில் களையெடுப்புச் செய்ய முன்வருவார்களாக!

முப்பது அகவைக்குள் இவ்வளவும் செய்த சுப்பிரமணிய பாரதி முழுவாழ்வு வாழ்ந்திருந்தால், தமிழர் கதியென்ன? எண்ணும்போது என்மனம் திகைக்கிறது.

தமிழன்னை தன்னைக் காப்பாற்றிக் கொண்டாள்

வாழ்க! தமிழ்

கொடையிற் சிறந்தவன் யாரென்றால் கர்னன் என்கிறாயே! முல்லைக்குத் தேர்ந்த பாரியை—மயிலுக்குப் போர்வை தந்த பேகனை—குமணனை ஏன் நீ எண்ணவில்லை.
வீரத்திற்கு சிறந்தவன் யாரென்றால் வீமன் அருச்சுனன் என்கின்றாயே! வானவரம்பன் சேரலாதனை—கரிகாற் பெருவளத்தானை—செங்குட்டுவனை நீஎண்ணவில்லை.
கற்பிற் சிறந்தவா யாரென்றால் சீதை திரௌபதி என்கின்றாயே! கண்ணகியை மாதவியை—கோப்பெரும்பெண்டை நீ எண்ணவில்லை. ஐயோ! தமிழா! சிந்தி.

தமிழ்மான மறவன்–பேரறிஞர்–சாலை இளந்திரையன் அவர்களின் " தமிழனின் ஒரே கவிஞன்" என்ற நூலிலிருந்து------

--தமிழ்ச்சாதியின கவிஞன் என்ற முறையில் சுப்பிரமணியனைவிடச் சுப்புரத்தினம் பல்லாயிரம் மடங்கு உயர்ந்து நின்றான்.-----

---என் கல்லூரித்தோழர்களில் ஒருவரான கிருட்டினசாமி என்னும் "கலைமணி" புரட்சிக்கவிஞரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். எங்கள் வகுப்புத் தோழர் ஒருவர் ஏதோ தாசன் என்று புனைபெயர் சூட்டிக்கொள்ள விரும்பியபோது (பாரதிதாசன்) ஏன் தாசன் என்று பெயர் வைத்துக்கொண்டோம் சுப்புரத்தினம் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறான். நீங்கள் என்னப்பா! இன்னும் தாசன் தாசன்னு என்று கோபித்தார்.---

--புரட்சிக் கவிஞனைச் சென்னையில் சந்தித்தோம். பேச்சின் ஒரு கட்டத்தில், பாரதி என்ற கவிஞனைவிட பாரதி என்ற மனிதன் உயர்ந்தவன் என்று குறிப்பிட்டார்.---

--சுப்பிரமணியன் இலக்கியப் படைப்பில், இந்துமதத் தனங்களுக்கும்–சமக்கிருதக் காதலுக்கும் பெருமளவு உட்பட்டவனே.---

--காலப்போக்கில் சுப்புரத்தினக் கவிஞன் சுப்பிரமணிய க்கவிஞனின் கருத்தோட்டங்களிலிருந்து மிகவாக வேறுபட்டு, பாரதிதாசன் என்ற பெயரில் கொண்டிருந்த மயக்கத்தை ஓரளவு குறைத்துக்கொண்டான்---.

--சமக்கிருதத்திற்கு முதன்மை தருவதையே நோக்க மாகக்கொண்ட சுப்பிரமணியக் கவிஞன் கூட "யாமறிந்த மொழி களிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடவேண்டிய கட்டாயத்தை அவனுக்கு ஏற்படுத்தியது– தமிழ்மொழி.---

--சாதாரணப் பார்ப்பான் மட்டுமல்ல "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று வாய்தவறிப் பாடிவிட்ட சுப்பிரமணியப் பார்ப்பான்கூட சமக்கிருதத்திற்கு முதலிடம், தமிழுக்கு இரண்டாம் இடமென்று மிழற்றுவான்.---

பாரதிதாசன் என்ற சுப்புரத்தினம் தன் இளமைப்பருவத் தில், பாரதியினுடைய கனல் தெறிக்கும் புரட்சிப் பாடல்களில் மனதைப்பறி கொடுத்து தனக்குப் பாரதிதாசன் என்று புனைபெயர் சூட்டிக்கொண்டான். அவனுடைய கவித்தவமும்– சமூகக் கண்ணோட்டமும் விரிவடைந்தபோது, பாரதியைப் புரிந்துகொண்டு, அவனிடமிருந்து விலகத்தொடங்கினான் என்பதை மேற்சொன்ன எடுத்துக்காட்டுகள் உறுதிப்படுத்து கின்றன.



# சேற்றுக் குளியல்

அன்பின் தன்மானமிக்க தமிழர்களே! கடந்த இரண்டாயிரங்களில் ஆரம்பித்து, கி.பி பதினோராம் நூற்றாண்டளவில் முற்றாகவே தமிழியத்தை மூடிவிட்ட, வடமொழி இலக்கியங்களும்–வேத இந்துசமயமும் எம் பழந்தமிழ்ப் பெருமைகளையும், சிந்தனைகளையும் மறைத்து, அர்த்தமில்லாத தானச்சடங்குகளைச் சமயமென்றும்– ஆபாசங்களைப் புனிதம் என்றும்–பகுத்தறிவுக்கு ஒவ்வாத அநீதிகளைச் சனாதனதர்மம் என்றும்–கேடுகெட்ட காமப்பித்தர்களை, பெண்சபலம் கொண்ட, இல்லறப் பண்பற்ற ஆரியக் கதாநாயகர்களை உத்தமர்களாகவும் காட்டி, தமிழினத்தை அவ்விழிவுகளைப் பின்பற்றி வாழ வைத்துவிட்டது.

இயல்பாகவே, அந்நியத்தில் மயங்கும் தமிழினப் பண்பினால், அந்நியர்கள் துணிவுடன் எம்மொழியூடாக, இலக்கிய த்தினூடாக, சமயமூடாக வேண்டியளவுக்கு மேலேயே தன்சாக்கைப் புகுத்தி எம்மினத்தை அடிமைகொண்டு விட்டார்கள். தமிழர்களும் படித்த அறிஞர்கள் உட்பட, இது சரியா? இது தமிழ் வாழ்வா? இவ்வுரை இலக்கணமும் தமிழும் பொருந்தியதா? என்றெண்ணிப்பாராமல்–மாமண்டைகளாய் பின் பற்றி வந்துள்ளார்கள். இவ்வழிவுக்கு மதுவிலும்–மாதரிலும் மயங்கிக் கிடந்த பிற்காலத் தமிழ்மன்னர்கள் ஏற்றமழித்தார்கள். கி.பி இரண்டாம் நூற்றாண்டக்குப் பின் எழுந்த தமிழிலக்கியங் களை விட, வடவரைத்தழுவிய காவியங்கள் அதிகமாகும். அப்படி எழந்த தழுவல்கள் மூலத்தில் கதாநாயகர்களிடமிருந்த தீப்பண்புகளை நீக்கி, மகா உத்தமர்களாகக் காட்டின. இதனால், தமிழினம் சிந்திக்க முடியாமல் தாழ்ந்,து போயிற்று.

இனியென்ன செய்வது, போகட்டும் என்று பொறுத்திருந்தால், சேற்றில் குளித்துப் பன்னீர் தெளிக்கிற எழுத்தாளர்களால் அமைதியடையமுடியவில்லை. இன்றும் கூடப் பாருங்கள், கம்பன் பாடியது போதாது என்று தமிழகத்தில் கொஞ்சப்---------அறிஞர்கள், கம்பனைப் பற்றியும் கம்பராமா யணம் பற்றியும்–பாரதத்தைப் பற்றியும் எழுதி எழுதிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தனித்தமிழ் காவியங்கள் பற்றி எந்தத் தமிழ் எழுத்தாளனும் சிந்திப்பதாக இல்லை.

மக்கள் இலக்கியம் என்பது உலகைப் பொறுத்தவரை, ௨0 ம் நூற்றாண்டிலேயே உருப்பெற்றது என்று துணிந்து கூறலாம். அண்மைக்காலச் சேக்ஸ்பியர் கூட இராசாராணிக் கதைதான் எழுதினான். இதுவும் ஒருவகை அடிமைமனப்பான்மை தான். தனிமனிதப் போற்றுதலில் எழுந்தது.

ஆனால், அண்ணலளவாக கி.பி 156ம் ஆண்டளவில் எழுந்ததாக க்கருதப்படும் சிலப்பதிகாரம், என்னும் நறுந்தமிழ் நூல், குடிமக்களை முதன்மைப்படுத்தி—சாதாரண குடிமக்களைத் தலைமைப் பாத்திரங்களாக்கி, மும்முடி மன்னரையும் உறுப்புப் பாத்திரங்களாகப் படைத்து எழுந்த துணிகா நூல்—.சோழன் பெருவாழ்வும் தந்து அள்ளிவழங்கி நிற்க— பாண்டியன் உயிர்தந்து நீதிவழி நிற்க—சேரன் வடவரை அழித்துச் சினம் முடிக்க ஒரு வணிகனையும், அவன் மனைவியையும், ஒரு நடனமாதையும் காரணமாக்கி எழுந்த நூல். இந்த உயர்ந்த நூல் பற்றி சாமிநாதையரும், புலியூரானும், செல்லப்பாவும் என ஒரு சிலர் உரை எழுதி வெளியிட்டார்கள். அவ்வுரைகளைக்கூடப் படிக்க மீண்டும் ஒரு ஆசிரியர் வேண்டும். சிலம்பிற்கு என் இந்த நிலை? ஆரிய பாரத, ராமாயணக் கதாநாயகர்களைப் பற்றி எண்ணற்றவை எழுந்திருக்க, அவை போதாது என்று, இன்றும் விதவிதமாக, கோணம் கோணமாக, நுணுகி நுணுகி எழுதுகின்ற தமிழகத்து எழுத்தாளன், தமிழரின் மிகவுயர்ந்த நாகரீக மேன்மையை—ஆட்சிச் சிறப்பினை—உயிர்தரு நீதியை—நாட்டுவளத்தை—நன்மக்களடர்ந்த நானிலம் போற்றிய வாழ்வியலை—மொத்தத்தில் தமிழினத்தின் பெருந்தகைமையை, படம்பிடித்துக் காட்டுகின்ற சிலம்பைச் சாதாரண மக்களும் படித்துப் பயன்பெறுமாறு எழுத முன்வாராதது என்? தமிழறிஞர்கள் இதுபற்றி எண்ணிப்பாராதது என்? உரைநடையில் சிலம்பு வந்துவிட்டால், தமிழினம் தன்னை உணர்ந்துவிடும் என்பதாலா?

வடவனுக்காக, பொய்யை மெய்யாக்கி—இல்லாததை உருவாக்கி, எழுதித்தொலைத்த வையாபுரி, இறந்து தொலைந்த பின்னும் அவன் எழுதிய சதிக் குப்பைகளைத் தேடி எடுத்து அச்சேற்ற அறக்கட்டளை அமைக்கின்ற அடி——————தமிழர்களுக்கு சிலம்பை எளிதாக்க மனம் வருமா?

சுப்பிரபாதம் முதல் இராமாயண பாராயண, தோத்திரங்களை வெளியிடவும், விற்பனைக்குமென லிப்கோ போன்ற நிறுவனங்கள் இருக்கிற, தமிழர் நாட்டிலே சிலம்பைப் பற்றிய எண்ணம் எப்படி வரும். போகட்டும், அடுத்த தலைமுறை கட்டாயம் இந்தக் குறையை நீக்கிவிடும். பண்டைத் தமிழிலக்கியங்களில் உரை என்கிற பெயரால் நுழைந்த வடவன், பெண்ணுரிமை தந்த கருத்துக்களைத் திரித்தான். பழந்தமிழ்ச் சிந்தனைகளை—கலை—இசை—கூத்து நூல்களையெல்லாம் மொழி மாற்றம் செய்து கொண்டு, மூலங்களை அழித்துத் தனதாக்கிக் கொண்டான். அழிப்பதற்குத் தன் கைக்கு எட்டாதவற்றை,



மூடர்களாகிவிட்ட எம்முந்தையோரைக் கொண்டே அழிப்பித்தான் கற்றானின் கல்வி சிறப்படைய, கற்ற சுவடிகளை கங்காதேவிக்கு அர்ப்பணம் செய்க— அதாவது ஆற்றிலே விடுக என்றான்.. ஐயர் சொல்லை மறுப்பானா? தமிழன் மறுக்கலாமா? எல்லாச் சுவடிகளையும் ஆற்றிலே விட்டான். என்னவோ தெரியாது, தண்ணீருக்கும் தமிழுக்கும் பொருத்தமில்லைப் போலும். மூன்று வெள்ளப்பெருக்குகளும் அள்ளிக் கொண்டு போனதில் மீந்ததை தமிழனே தண்ணீரில் விட்டான்.

கடந்த நூற்றாண்டில் சி.வை.தாமோதரம்பிள்ளை, சாமிநாதையர் ஆகியோர் சுவடிகளைத்தேடி அச்சேற்ற முனைந்த நாட்களில் பெரும்பாலான சுவடிகள் அழிந்தொழிந்து போய் விட்டன. கிடைத்த சிலதுக்குள்ளும், சாமிநாதையர் என்ற பார்ப்பார் இடைச்செருகல்—ஊடுருவல் செய்துள்ளார். இதனைப் பேரறிஞர் சாலை இளந்திரையன் அவர்கள் கண்டறிந்து வெளிப் படுத்தியுள்ளார். இந்தத் தடைகளையெல்லாம் தாண்டி, கைக்குக் கிடைத்தவை சங்கலக்கியங்களும், ஐம்பெருங்காப்பியங்களில் சிலவுமே. குண்டலகேசி, வளையாபதி கிடைக்கவில்லை. சீவகசிந்தாமணியில் சில பாடல்கள் கிடைக்கவில்லை. கிடைத்திருக்கிற சில நூல்களில், கிடைக்காமற்போன நூல்கள் பலவற்றைப் பற்றிய குறிப்புகளை அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். இவ்விதமாகத் தமிழரின் இலக்கியச் செல்வங்கள் அழிந்துபட, வடவனின் இராமாயணமும்—பாரதமும்—இவற்றின் உபகதைகளும் அலுங்காமல் நலுங்காமல், அழியாமல் தமிழர்களிடம் உயிர் வாழ்வது விந்தையிலும் விந்தை.

இந்த விந்தையை ஆரியச்சதியை எண்ணிப்பாராமல் ஏற்றுக்கொண்டு, அவனுடைய ஆபாசக் களஞ்சியங்களான இராமாயண பாரதங்களைப் போற்றி, அதன் தலைமக்களை தெய்வங்களாக்கி, அவர்களின் அருளைப் பெற, அக்காவியப் பாடல்களைப் பாராயணம் செய்கிறான். ஐயோ!

எப்படித் தாழ்ந்து போனான் தமிழன்.

இனம் விழித்தெழுந்துவிட்ட இன்று கூட, தன்மானத் தந்தை ஈ.வெ.ரா பெரியாரும், புரட்சிக்கவிஞன் சுப்புரத்தினமும் வேண்டியளவு எடுத்துச் சொன்ன பின்னும், தமிழன் இந்தக் கேவலங்களைப் போற்றுகிறான் என்றால், ????————

பாரதத்தைப் பாருங்கள், அதன் இல்லறப் பண்பு ஐந்து ஆடவருக்கு ஒரு மனைவி. அதுவும் அண்ணன் தம்பிகள். இன்று அண்ணன் கொஞ்சியவளை நாளை தம்பி கொஞ்சி மகிழ்வான். சீ! எத்தகைய இழிபண்பு. கிழண்டிப்போன தருமன்,

காதலுணர்வுகள் குறைந்தவன், பெண்டாட்டியைச்சூதில் பணயம் வைத்தான். தோற்றான். மனைவியைச் சூதுப்பொருளாக வைத்தலே கேவலம். வென்றவன் இன்று தன் உடைமையான இவள், ஐந்து ஆடவர்கள் பார்த்த உடலுடையவள். எனவே, சபையும் பார்க்கட்டும் என்று தாராளமனப்பான்மையில் துகில் உரிந்தான். இது மற்றொரு கேவலம்.

இந்தக் தருமனை தமிழ்ப் பார்ப்பான் சுப்பிரமணியன் போற்றுகிறான். எப்படி?

உலகு தொடங்கிய நாள் முதலாய் நம் சாதியில்

ஓங்கி நின்றார்த் தருமனைப் போலெவர் மாமனே! என்று.

கர்னனைப் பெற்று ஆற்றிலே விட்டாள், கன்னியாகிய குந்தி. அவளின் நடத்தைகெட்ட காமக்களியாட்டுக்கு புகழ்பாடுகிறான் தமிழன். மானிடப் பெண்ணுக்கு தேவர்கள் பிள்ளை கொடுத்த வாலாறு—புனிதம்தானே. போற்றவேண்டியது தானே.

இக்கதையின் இன்னொரு கதாநாயகன் அருச்சுனன்—திரெளபதியின் ஐந்து கணவர்களில் ஒருவன்—போன இடம் எல்லாம் பெண்டாட்டி வைத்திருந்தவன்—இவனுடைய கடவுள் நண்பன் கிருட்டினன்—குளிக்கும் பெண்களை ஒளிந்திருந்து பார்க்கும் காம ரசிகன். இந்தக் கிருட்டினனை முன்விட்டு போரறம் மீறி கர்னனை கொன்று வெற்றி கொள்கிறான் அருச்சுனன்.

தமிழன் இல்லறத்தைக் குறளில் கண்டு போற்றுகிறது உலகம். தமிழன் இந்தப் பாரதத்தைப் போற்றுகிறான்.

சூது—காமம்—முறைகேடு—சதி இந்தப் பாரதத்தை தமிழன் போற்றலாமா?

தமிழர்களைப் பொறுத்தவரை பாரதத்தைவிடத் தெய்வாம்சம் பொருந்தியது இராமாயணம். இராமாயணம் என்ன கூறுகிறது என்றெண்ணிப் பாராமலே, இராமன் உத்தமப் பண்புகள் கொண்ட அவதாரம் என்று போற்றுகிறான் தமிழன்.

இராமனின் தந்தை தசரதனுக்கு 364 மனைவியர். இந்தத் தசரதனின் மகன் இராமன் அவதாரம். இந்த அவதாரத்தின் கதையை எழுதப்புறப்பட்ட ஆரிய வெறியன் வான்மீகி—இராமனை உயர்த்திக் காட்ட எண்ணி—தமிழனை அரக்கனாகவும், குரங்காகவும், கழுகாகவும், கரடியாகவும் காட்டினான்—அதுவும் அனுமன் வேதம் படித்த குரங்கு. இத்தகைய நச்சுக்குணம் கொண்ட வான்மீகி, எவ்வளவு முயன்றும், இராமனை உத்தமனாகக் காட்டமுடியாமலும்—தமிழ் இராவணனைத் தீயவனாகவும் காட்டமுடியாமலும் திணறியுள்ளான். ஆரியதாசன் கம்பன் தான் தன்னால் முடிந்தளவு இராமனை உயர்த்திக் காட்டியுள்ளான். (வான்மீகியின் மூலராமாயணத்தைப் படித்துணர்க)



வடவாரிய மாயையில் மூழ்கிப்போன குலோத்துங்கனும், அவனுடைய புலவன் கம்பனும், இராமாயணத்தை தமிழில் தழுவியபோது, மூலத்தில் இல்லாத புனிதங்களை நற்குணங்களை இராமனுக்குப் புனைந்து—வான்மீகியால் முடியாமற் போனதை நிறைவேற்றி, தமிழனை ஆரியத்துள் தள்ளிவிட்டார்கள். வான்மீகியிலே கீழ்மைகள் நிறைந்தவனாகவே காணப்படுகிறான் இராமன். காமம்—மது—புலால்—கொலைவெறி—சாதிவெறி—சபலம்—சந்தேகம்—சூழ்ச்சி— கோழைத்தனம்—இவைகளைக் கொண்டவனாகவே காணப்படுகிறான். இந்த இராமனின் குணாதிசயங்களை வான்மிகியில் உள்ளபடி ஒரு வரிசையில் தருகிறேன் படித்துத் தெளியுங்கள்.

1------களவாகத் தேவேந்திரன் தன்னைக்கூட வருகின்றான் என்று தெரிந்திருந்தும்—அவனை ஆசையுடன் கூடிய அகல்யா—கெளதமரின் சாபத்திற்குள்ளாகிக் கல்லாகி—இராமனின் பாதம் பட்டுச் சாபநீக்கம் அடைகிறாள்—அந்த உடற்தினவு கொண்டவளை—ஆச்சிரமத்தின் தூய்மையைக் கெடுத்தவளை பதிவீரதா திலகம் என்று போற்றுகிறான்.

௨------வனவாசத்தின் போது சூர்ப்பனகை இராம இலக்குமணர்களைச் சந்திக்கிறாள். கம்பன் சொல்வதுபோல் இராமன் மேல் காதல் கொண்டாள் என்றே வைத்துக்கொள்வோமே. அவள் ஒரு இளம் விதவை. நீண்ட நாட்களாகத் தனிமையில் வாடியவள். அவளுக்கு இனிமையாக அறிவுரை கூறி வழிப்படுத்த அவதாரராமனால் முடியவில்லை. அண்ணனும் தம்பியும் தனித்தனியே அவளுடைய அழகைப் புகழ்ந்து, அவளிடம் சல்லாபிக்கிறார்கள். அண்ணனும் தம்பியும் இப்படிக் கதைத்து அவளை தடுமாறவைத்ததை— கம்பன் விட்டுவிட்டு இவள் காமம் கொண்டணுகியதால் மூக்கறுத்தார்களாம்.—முடியுமா? ஏற்றுக் கொள்ள முடியுமா? அதுவும் காமாந்தகாரி அகல்யாவுக்குப் பாபவிமோசனம் தந்த இராமன்—காதல் கொண்ட ஒரு இளம் விதைவையை மூக்கரிந்தான்—கருணாமூர்த்தி.

3------வாலியை மறைந்திருந்து அம்பெய்து கொன்றான். ஏன் தெரியுமா? வாலியை வெற்றி கொள்ள இராமன் உதவினால், சீதையைத் தேட சுக்கிரீவன் உதவுவதாக ஒப்பந்தம். மனைவியைத் தேட உதவிக்காக அநீதி புரிந்தான்.

4------வீபீடணனுக்குப் பதவியாசை காட்டி, இராவணனைக் காட்டிக் கொடுக்க வைத்தான்

5------யுத்தகளத்திலே, இராவணன் தனித்து நின்று போராடுகின்றான். இராமனோ, இந்திரன் அனுப்பிய உதவி—அனுமன்—இலக்குமணன்—வீபீடணன்—இன்னும் இராமனுடைய ஆட்களுடன் சூழ்ந்துகொண்டு, சூழ்ச்சியால் கொன்று போரறத்தை மீறினான்.

6------அந்நியனிடம் சிறைப்பட்டு நீண்ட நாட்கள் இருந்த சீதை கற்புடன் இருப்பாளா என்று சந்தேகப்பட்டு தன் படை வீரர் முன்னால் அவளை அவமதிக்கிறான்.

"நீ ஒழுக்கத்தில் சந்தேகப்படக் கூடியவளாய் உள்ளாய். எந்தக் கணவன் பிறர் மனையில் வாழ்ந்த தன் மனைவியை ஏற்றுக்கொள்வான். எனக்கு உன்னிடம் பற்றில்லை. உன்னைக் காண என் கண்கள் கூசுகின்றன. நீ விரும்பியபடி போகலாம். என்று சீதைக்குக் கூறுகிறான்.

7------சீதை அவமானத்தால் தற்கொலை செய்ய நெருப்பில் குதித்தபோது கூட, அவளைத் தடுக்க முயலவில்லை. பன்னிரு வருடம் அவனுடன் வாழ்ந்தவள், ஒரு பெண், தீக்குளிப்பதைப் பார்த்து நின்ற ஈரமற்ற நெஞ்சினன். பிறரால் காப்பாற்றப்பட்ட அவளுடன் பின் கூடி வாழ்ந்தான். இத்தகைய ஆண்மையும்–மானமுமற்றவன் இராமன்.

8------பதினான்கு வருடம் தான் காட்டில் வாழப் பாதன் நாடாண்டதால், அவனுக்கு இராச்சியத்தின் மீது ஆசையேற்பட்டு, தனக்கு எதிராகக் கிளம்பிவிடுவானோ என்று ஐயப்பட்ட இராமன். அனுமனைக் கூப்பிட்டு, "நீ உடனே புறப்பட்டு அயோத்திக்குப் போய், நான் வெற்றியுடன் வருவதைப் பாதனுக்குச் சொல்லி, அவனுடைய முகக்குறிப்புகளை அவதானித்து, அவனுடைய நோக்கம் என்னவாயிருக்கும் என்பதை எப்படியும் தெரிந்து வா" தந்தைவழிக் கிடைத்த செல்வமிக்க இராச்சியம், அவன் மனதை மாற்றி, ஆசையை உண்டாக்கி, பாதன் எனக்கு எதிராக நிற்பான் என்றுதான் நான் நம்புகிறேன். என்று கூறுகிறான்.

9------போர்க்களத்திலே இலக்குமணன் மரணக்காயம் பட்டுக் கிடக்கிறான். கவலைகொண்ட இராமன் போரை நிறுத்திவிட எண்ணி, தன் ஆட்களிடம்–சீதை–மனைவி போனால் போகட்டும், மனைவிகள் போகுமிடம் எங்கும் கிடைப்பார்கள், சகோதரன் கிடைப்பானா? என்கிறான்.– எப்பேர்ப்பட்ட உத்தமராமன் இவன்: இவனைப்போய் ஏகபத்தினி விரதன் என்கிறார்கள்.

10-----சீதையைப் பற்றி நாட்டிலே பழிப்புரை எழுந்தபோது, அவள் நாட்டின் அரசி என்ற வகையில் நாட்டிற்குக் களங்கம் என்று கூறி, நிறைமாதக் கர்ப்பினியான அவளைக் காட்டிலே விடுவிக்கிறான். ------அவதாரபுருடன்–உத்தமசீலன்–ஏகபத்தினி விரதன் முடிதுறந்து அவளைக் காப்பாற்றாமல், அவளைத் துறந்து பதவியைக் காப்பாற்றிக் கொண்டான்.

சோதிடனின் கதையைக் கேட்டுச் சினம் கொண்டு, இளவரசுப் பட்டத்தையும் துறந்து, துறவியாகிப்போன இளங்கோ வடிகள் பிறந்த இனத்தில் பிறந்த தமிழன் இந்த இராமனைப் போற்றிப்புகழ்கின்றான்.



((எப்படியும் வாழலாம் என்கிற ஐரோப்பாவில், கடந்த நூற்றாண்டில், இங்கிலாந்தின் ஜோர்ச் மன்னர் தன் காதலிக்காக முடி துறந்தார்.)

11------சிந்துநதிதீரத்திலே இருந்த தமிழ்ப்பேரரசன் இலவணன். (இராமாயண காலத்தில்) போர் செய்து அவனை வெற்றிகொள்ள முடியாத கோழைராமன், தன் கடைசித்தம்பி சத்துருக்கனை அழைத்து, -----சண்டைக்கு வந்ததுபோல் நீ போகாமல், போராயுதங்களை மறைத்துக் கொண்டு, நட்பில் வந்ததுபோல் போய், திடீரென அவனைத் தாக்கிக் கொன்றுவிடு---என்று அனுப்பினான். சத்துருக்கன் அப்படியே செய்து, இலவணனைக் கொன்று சிந்து நாட்டைக் கைப்பற்றினான்.

இராமனுடைய காலத்தில் தான் இந்துநதிப் பள்ளத்தாக்கிலிருந்த தமிழர் நாகரீகம் சிதைக்கப்பட்டது, என்று இதிலொரு சான்று கிடைத்துள்ளது.

12-----தாழ்ந்த சாதியில் பிறந்தவன் தவம் செய்கிறான் என்று யாரோ சொன்னதைக் கேட்டு, ஓராற்றங்கரையில் தலைகீழாக நின்று தவம் செய்து கொண்டிருந்த சம்புகன் என்னும் சூத்திரனை–அதாவது தமிழனை–இராமன் வெட்டிக்கொன்றான். காரணம், தாழ்ந்தசாதி தவம் செய்யக்கூடாது. வெட்டலாமா? தவசியை–எத்தகைய சாதிவெறி.

இன்னும் எத்தனையோ கீழ்மைகளை தன் பண்புகளாகக் கொண்ட கலப்புப் பிறவியை–தூய்மையற்ற ஒருவனை–மனிதத் தன்மையின் அனைத்துப் பக்கங்களாலும் தீயவனாகக் காணப் படுகின்றவனை–அவனுடைய தவறுகளுக்கு தத்துவம் கற்பித்து உபகதைகளைக் கூறிக்கொண்டு, அவனை இந்திய தேசீயக் கதாநாயகனாக மட்டுமல்லாமல், கடவுளாகவும் காட்டுகிறார்கள்.

ஆரிய இடையர்கள் இந்தியாவுக்குள் நுழையுமுன்பே–பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கொடி கட்டிப் பறந்த தமிழர் நாகரீகத்தை மறைத்து, அழிக்க ஏற்படுத்திய ஆபாசக் கதைகளை, தமிழன் பாராயணம் பண்ணிச் சிந்தனையற்ற சின்னவனாகிப் போனான்.

பேறிஞர் திரு வி.க கூட "இப்போ தமிழ் பேசுகிறவன் எல்லாம் தமிழன்தான், யார் தமிழன், யார் பார்ப்பான் என்று அடையாளம் காணமுடியவில்லை. ஆகையால் அப்படிப் பிரித்துப் பார்க்கவேண்டாம். என்று கூறுகிற அளவுக்கு கருத்துத் தளர்வு கொண்டிருந்தார் என்றால், சாதாரணத் தமிழன் எப்படிக் கடைத்தேற முடியும்..

இராவணனை எந்த இடத்திலும் தீயவனாகக் காட்ட முடியாமல் திண்டாடிய வான்மீகி, சீதையைத் தகாத நோக்குடன் தூக்கிச் சென்றதாக ஒரேயொரு இடத்தில் தான்

கதை கட்டிவிட்டுள்ளான். மற்றையவிடங்களில், வான்மீகி தன்னையறியாமலே இராவணனுடைய உயர்பண்பு–கலைஞானம்–கல்வி–கொடைத்திறன் பற்றியெல்லாம் உயர்வாகக் கூறியுள்ளான். தமிழ் நீதி அவனையறியாமலே அவன்வாயில் விளையாடிவிட்டது.

வடவனுக்கு வளமான சிந்தனாசக்தி குறைவோ–அல்லது அவனுடைய வாழ்க்கையே கீழ்மையானதோ தெரியவில்லை, அவனுடைய காவியங்களும் கதைகளும், ஒரே அச்சில் வார்க்கப் பட்டதாகவும், கேவலங்கள் நியாயங்களாக்கப் பட்டதாகவும் உள்ளன.

காவியப் பண்புகள்

பாரதம்-----கற்பிழந்தவளைப் போற்றல்–சூதாட்டம்–பெண்ணை பந்தயம் வைத்தல்–சாதிவெறி–போரறம் மீறல்– வன வாசம் பதினான்கு வருடம்.

இராமாயணம்-------இருதடவை பெண்ணை நடுத்தெருவில் விடல்–காமாந்தகாரியை உத்தமி எனப்போற்றல்–சாதிவெறி–போரறம் மீறல்–கடுங்காமம்–வனவாசம் பதினான்கு வருடம்..

உபகதை

நளவெண்பா-------சூது–பெண்ணை நடுக்காட்டில் பரிதவிக்க விடல்–மறைந்து ஒழுகல்8வனவாசம்போல்)

அரிச்சந்திரன்-----பெண்ணை அடகு வைத்தல்–வனவாசத்தற்கு பதில் சுடலை காத்தல்.

பெண் என்றால் சாதாரணமாகப் புரிந்து கொள்ளவேண்டாம். மனைவியாகிய பெண்.

ஐந்திணையில் அகம் வகுத்து, களவு–கற்பு எனும் இரு வழி நெறிநின்று, வாழ்வு கண்ட தமிழன், போற்றும் காவியங்களைப் பாருங்கள். கடைத்தேறுவானா தமிழன்?

வடவாரியத்திலே கற்பரசி துகிலுரியப்படுவாள்–காட்டில் விடப்படுவாள். இரண்டிடத்திலும் அவதாரம் நிற்கிறது.

காட்டில் விடப்பட்ட ஆரியத்தி–தமயந்தி இரண்டாம் சுயம்வரத்துக்கு நிற்கிறாள்–கல்யாணம் பண்ணக் கடவுள்களும் வந்திருந்தன.

தமிழியத்திலே–நீதி பிழைத்தால் மன்னன் உயிர் தருகின்றான்–மதுரைமாநகர் எரிகிறது–காதலின் தோல்வியிலே அறம்வளர்கிறது மணிமேகலையில்–இப்படி எத்தனை! எத்தனை! நாற்பொருள் அறங்கள் செறிந்து கிடக்கின்றன தமிழில். இவற்றையெல்லாம் சிந்தியாமல், இந்த இழிந்தவைகளைத் தமிழன் போற்றிப் புகழ்ந்து, அந்த இழிவுகளை உயர்வுகளுக்கு உதாரணம் காட்டுகிறான் என்றால் . என்னே மதியீனம்! மடமை!



போராண்மை என்பது தறுகண் ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

என்று போரறம் வகுத்தவன் தமிழன்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

என்று சமத்துவம் வகுத்தவன் தமிழன்.

ஒருத்தனுக்கு ஒருத்தி என்று செம்புலப் பெயல் நீராய் இரண்டறக் கலந்த இன்ப இல்லறம் கண்டவன் தமிழன். இந்தத் தமிழ்ப் பாரம்பரையிலே வந்த நாங்கள், இனியும் இந்தச் சதிகார ஆபாசக் களஞ்சியங்களைப் படிக்க வேண்டுமா???

இந்தியத் தமிழன் அடிமைச்சகதியில் ஊறிப்போனவன். அவன் மீளத்தெரியாமல் கிடக்கிறான். காரணம், அடையாளம் கண்டறிய முடியாமல் பார்ப்பனியம் மூடிக்கிடக்கிறது. ஆனால், தமிழீழத்தமிழன் தோளை நிமிர்த்திவிட்டவன். அடிமைத் தனத்தை உடைத்தெறிந்து, தனித்தமிழ் வாழ்வுக்கு வந்து விட்டவன், அவன் இனியும் இந்த இழிவுகளை, அந்நியத்தை ஒதுக்கித் தள்ளாமல் இருப்பது சமூகக்கேடு. இதுவரை புரிந்து கொள்ளாமல் இருந்தால் இனியாவது புரிந்துகொண்டு ஒதுங்குக.

இலக்கியம் என்று அந்நிய–ஆரியக் காவியங்கள் பற்றி எழுதிக்கொண்டிருக்கிற, எழுத்தாளர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் புரிந்து கொள்ளாவிட்டால் புரிந்து கொள்ள முயலுங்கள். தெரிந்துகொள்ள முயலுங்கள். இந்தக் காவியங்களைப் பற்றி முழுவதும் தெரியாமல், தெரிந்தாலும், முன்னர் யாரோ சொன்ன கதைகளை வைத்தக்கொண்டு, இராமாயணத்திலும்–பாரதத்திலும் உத்தமர்களை உதாரணம் காட்டாதீர்கள். நீங்கள் தமிழியமும் தெரியாமல், ஆரியமும் தெரியாமல், இன்று ஆரியச்சதியைக் கண்முன் கண்டும் புரியாமல், கடலாடுவதாக எண்ணிக்கொண்டு சேறாடாதீர்கள். என உங்களை மன்றாடுகிறேன்.

தமிழை எழுதுங்கள்–தமிழனை எழுதுங்கள்–தன்னிச்சை யாகச் சிந்தித்து எழுதுங்கள். தமிழால் எழுதப்பட்ட, தமிழ ழிக்கும் சதிகளை விடயம் புரியாமல் மீட்டெழுதவேண்டாம். அப்படி நீங்கள் எழுதுவது சாதாரண தமிழ்மக்களின் உள்ளத்திலே, அறியாமை விசத்தை விதைப்பதாகும் என்பதை உணருங்கள்.-------------வாழ்க தமிழ்---------------

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால்
சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு
—சுப்பரத்தினம்

# பொங்கல் திருநாள்

அன்பிற்குரியவர்களே!

"கமலம்" ஆய்வத்தொகுப்பிதழின், முதல் மலர் உங்கள் கரங்களிலே நறுந்தமிழ்ப் புரட்சி மணங்கமழ மலர்ந்திருக்கிறது. இவ்வினிய மலர் சுறவம் (தை) திங்களிலே மலர்ந்திருப்பதால், இம்மலரில் பொங்கல் திருநாள் பற்றி உங்களுடன் பேசுவதில், என் உள்ளம் இன்பத்தால் பொங்குகிறது. பொங்கற்றிருநாள் தமிழர் வாழ்வில் அத்தகைச் சிறந்ததோர் திருநாளாகும். அதனாலன்றோ! இத்திருநாளை தைத்திருநாள்–தமிழர் திருநாள் –உழவர்திருநாள் என்றெல்லாம் சிறப்பித்து மகிழ்கிறார்கள்.

எங்கும் பசுமை கொழித்து, பூவும்–செடியுமாய், மலரும்–கொடியுமாய் காவெல்லாம் பொலிய, செந்நெல்லும்–தானியங்களும் கழனியெல்லாம் நிறைய, தெங்கும்–வாழையும் நறுங்கனிமாங்களும் தளதளனெத் தம் கனி தந்து கனிய, மழையும் தந்து, இனிமைக்கு, உயிரூட்டத்திற்கு, காற்றுக்கு, கண் விழிக்கொளியும் தந்து, அனைத்திலும் தானாய் நிற்கும் கதிரவனுக்கு இவற்றுக்கெல்லாம் நன்றி கூறும் முகமாக தமிழ் மாந்தனால் உருவாக்கப்பட்ட உன்னத பண்பாட்டின்–பகுத்தறிவின் திருநாளே, பொங்கற் திருநாளாகும். பொருட் செறிவும், ஆழ்ந்த உள்ளடக்கமும் கொண்டது. இத்திருநாள்.

ஆதிமுதல் மனிதன் தமிழன்–அவன் ஐம்பூதங்களை உணரத்தொடங்கியபோதே, நெருப்பின் பயனை நன்கறிந்தான். இரு பொருளின் தேய்வில் நெருப்பு உருவாயிற்று. அதனால் தேயு எனப் பெயர்பெற்று, தெய்–தீ எனவும் வழங்கலாயிற்று. இந்தத் தீயின் முழுமுதற் பொருளான கதிரவனைக் கண்டு, அது தெய்– தீயின் தன்மைத்தாய் இருத்தலால் தெய்வம். என்று பண்புப் பெயரால் அழைக்கப்படலாயிற்று. கதிரவன்–இத்தெய்வம் ஐம்பூதங்களின் ஆற்றல்களுக்கும் தானே மூலாதாரமாய் நின்று, தானும், கிளைத்தல்–காய்தல்–கனிதல் என்றிவ்வாறான பயன் விளைவுகளின் செயலில் நின்று உலகோம்பலால், தனக்குவமை இல்லாத கடவுட் தன்மையில் வைத்துப்போற்றினான். வள்ளுவன்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் – என்ற குறளில்

வானுறையும் தெய்வம் கதிரவன் என்ற பொருளில் பாடியுள்ளதாக பாவலர் திருமாலனார் இனிய பொருள் தந்துள்ளார்.

குமரி மாந்தன் தன் பண்புகளால் தெய்வத் தன்மையுடைய கதிரவனுக்கு நன்றிவிழா எடுத்தான். இதுவே, தமிழனின்–முதல் மனிதனின் விழா–இன்றுமுள்ள பொங்கல் விழா.

செந்நெல்விளைந்து, காற்றிலாடி, தலைசாய்ந்து நிற்கிறது.



தானியங்கள் முற்றிச் சலசலத்தாடுகின்றன. கரும்பு கணுமுற்றி வெடித்திருக்கிறது, தாமரையும்–ஆம்பலும்–குவளையும் மலர் விழித்து நிற்கின்றன. இவற்றை அளைந்து வருகிறது காற்று, பரவசமூட்டும் இனிய விளைவுகளின் நறுமணத்தை–.காற்றில் கலந்து வரும் இன்பத்தை முகர்கிறான்–உழைப்பாளி–உழவன். உள்ளம் மகிழ்வால் பொங்குகிறான். கதிரவன் கொடையின் முதல் விளைவைப் பாலிட்டுப் பொங்குகிறான். பொங்கி வழிகிறது பால். இல்லறத்தின் பயனாக இல்லாளும் மழலைகளும் மகிழ்வில் பொங்குகிறார்கள். உற்றம் சுற்றமுடன் உண்டு களித்து உறவாடி மகிழ்கிறார்கள். ஒற்றுமையின் இனிமையால் உள்ளம் பூரிக்கிறார்கள்.

துன்பங்கள் தீர, இன்பங்கள் சேர, துயாகல, நல்லறம் புரியும் எண்ணம் மலர, நாடு நலமடைகிற நாள். பொங்கல் திருநாள். தமிழர் வாழ்வின்பெருநாள்.

இந்தத் திருநாள் வருவது தைத்திங்கள் முதல் நாளில். ஆண்டின் முதல் நாளில், ஆண்டு முழுவதின் இன்ப வாழ்வுக்கு அடிசில் மங்கலம் (ஆண்டின் முதலுணவைக் கொண்டாடி உண்ணல்) செய்கின்றான். எனவே, அவனுடைய வாழ்நாளில் சிறந்த நாள் என்று சிறப்புறலாயிற்று.

நண்பர்களே! இந்நாளைத் தமிழர் திருநாள் என்பதேன், நாம். இன்னும் எத்தனையோ திருநாட்கள் இருக்கின்றனவே? என்கிறீர்கள்.––––––தமிழன் வாழ்வுக்கு இலக்கணம் வகுத்து, நீதிக்கு முறைவகுத்து, வீரத்தில் போரறம் காத்து வாழ்ந்தவன். உலகின் உச்ச நாகரீகத்தை என்றோ கண்டறிந்தவன். நீங்கள் இன்று கறுப்பராய் தலைகுனிந்து போகிறீர்களே வெள்ளைகளின் முன்னால், இந்த வெள்ளைகள் உங்களுடைய நாட்டிலே, பூம்புகார்ப்பட்டினத்திலே–கொற்கையிலே ஓர்நாள் உங்களுடைய மூதாதையர்களிடம் பணிபுரிந்து வாழ்ந்தவர்கள். தெரியுமா உங்களுக்கு? அந்த நாளிலும், அதற்கு முன்னாலும், மனித நாகரீகத்தின் ஆரம்பத்திலிருந்தே தமிழன் இத்திருநாளைக் கொண்டாடி வருகின்றான். பின்னாளில் வாழவந்த மேய்ப்பவர்களிடம்–வடவாரியரிடம் வீரத்தால் வீழாத தமிழன், வீழ்ந்தான் சமயப் புராணங்களால். காமரசம் கொட்டும்–கற்பனைச் சாகசங்கள் அடங்கிய–ஆரியரின் மேன்மையைக் கூறி நின்று அந்தப் புராணங்களால் வீழ்ந்தான். ஏன் வீழ்ந்தான் ? எப்படி வீழ்ந்தான் ? சிந்தை சிதறும் கேள்வி. வீழ்ந்தவன் ஆரியன் காட்டிய எல்லாவற்றையும் நம்பினான். தொழுதான். அதனால் அவன் கொண்டாடுகின்ற திருநாட்கள் பலதும், சித்திரைவருடம், தீபாவளி எவையுமே தமிழருடையவை அல்ல. ஆனால், உலகில் வேறெந்த மக்களிடமும் காணப்படாத,

உயர்ந்த பகுத்தறிவினடிப்படையில் கொண்டாடப்படும் பொங்கல் திருநாள் தமிழருடையது—தமிழன் பெருமை கூறுவது. அதனால் அது தமிழர் திருநாள்.

இந்நாளை உழவர் திருநாள் என்றும் கூறுகிறார்களே! ஏன் தெரியுமா? இன்று யந்திரங்களால் உழுதாலும் கூட, உழவின்றேல் உலகம் வாழாது. பசிப்பிணி தீராது. உழவன் உழுவதால் உயிரினங்கள் வாழ்கின்றன. இங்கு விரித்துரைக்க முடியாது எண்ணிப்பாருங்கள் புரியும். குறளிலே "உழவு" அதிகாரம் படித்துப் பாருங்கள் புரியும்.

சுழன்றும் ஏர்ப் பின்னது தான் உலகம் என்கிறானே வள்ளுவன். ஏரின் பின் என்றால், ஏர் பிடிப்பவனின் பின்னால் தானே. உழுதுண்ணாதவன் தொழுதுண்பவன் என்கிறானே வள்ளுவன். யாரடத்தில் தொழுகின்றான்? ஏர்பிடித்த உழவனிடம் தானே. எத்துணைப் பெருமை உழவனுக்கு.

சேக்கிழார் பாடுகிறாரே,

ஏரால் எண்திசை வளர்க்கும் புகழ் வேளாளர்
ஏரடிக்கும் சிறுகோலால் தரணியாளச்
சீராரும் முடியரசர் இருந்து செங்கோல்
செலுத்துவர் வேளாளர் புகழ் செப்பலாமோ!

வேளாளர் என்றால் சாதிப்பெயர் என்று எண்ணிவிடாதீர்கள். வேள் என்றால் மண் என்றும் பொருள். வேள் என்றால் மன்னன் என்றும் பொருள். ஆளர் என்றால் ஆள்பவர். எனவே, மண்ணையும் மன்னனையும் ஆளும் ஆற்றல் படைத்தவன் வேளாளன்—உழவன். இந்தப் பெருமைக்குரியவனின் உழைப்பால், ஏற்பட்ட நிறைவால், மகிழ்வால் ஏற்பட்டதல்லவா இந்தத் திருநாள். அதனாலே, உழவர் திருநாள் எனவும் போற்றப்படலாயிற்று.

இன்றிந்த நாட்களிலே, தமிழீழத்து மக்கள்—வெந்தழலில் வேகினும்—விடுதலைக்காய் வீழினும்—குண்டுகளால் உடல் சிதறிக் குலைந்திடினும்—குன்றாத ஊக்கமுடன் விடுதலைக்காப் போராடிக்கொண்டிருக்கிறார்களே இந்தவேளையிலே,

காலாதிகாலமாய் கட்டிக்காத்த—பாட்டன் பூட்டன் காலத்திருந்து குறுணியாய்ச் சேர்த்த—ஆடு மாடு கடியாமல் அருமை அருமையாக வளர்த்த கன்றுகாலிகளை—கற்றுக்கற்றுச் சேர்த்த கல்வி,கலை, செல்வங்களை எல்லாம், ஒரே இரவில் இழந்துவிட்டு—ஏதிலிகளாய்—அநாதைகளாய் எட்டு இலக்கம் எம் உடன்பிறப்புகள், உண்ண உணவும், உடுக்க உடையும், நோய்க்கு மருந்தும் இன்றி தவித்துக் கொண்டிருக்கிறார்களே, இந்த வேளையிலே பொங்கலா? அதைப்பற்றிப் புகழ் பாடிக் கொண்டிருக்கிறாளே! தேவைதானா? என்றெண்ணுவீர்கள்



நண்பர்களே! பொங்கலின் தேவை அன்றைவிட இன்று தான் நமக்கு அவசியமாகின்றது. கட்டாயமாகின்றது.

நாட்டுணர்வற்று—இனவுணர்வற்று அடிமைத்தனத்தில் சுகம் காணும் ஓடேந்திகளும், சேற்றிலே கிடப்பதால் மழை பெய்தால் என்ன? வெயில் எறித்தால் என்ன? என்று கிடக்கிற சுரணைகெட்டதுகளும், எங்கெங்கே குண்டுபோட்டால் அதிக தமிழரைக் கொல்லலாம் என்று காட்டிக் கொடுக்கிற தவறிப் பிறந்த தெமிழுகளுக்கும், உணர்வூட்ட—எடுத்துப் புரியவைக்க இன்று தான் பொங்கலின் தேவை மிகமிக அவசியம்.

இன்று பொங்கவும் பொருளில்லை. வீடில்லை வாசலில்லைப் பொங்குவது எங்கே? பொங்கினாலும் பொங்கிக் கொண்டிருக்கும் போது விண்படையுந்தின் ஒலிகேட்டு அஞ்சித் துடிக்கிறதே! பொங்கிய பொங்கலைக் குழந்தை ஆவலுடன் உண்ணப்போகும் போது குண்டு விழுந்து சிதறி மரணஓலம் எழுகிறதே! அப்போதாவது சிந்திக்காதா? ஏன்? ஏன்? ஏன்? நான் ஏன் ஒழிந்துகொண்டிருக்கிறேன்? நான் ஏன் அஞ்சிக் கொண்டிருக்கிறேன்? நான் ஏன் செத்துக்கொண்டிருக்கிறேன். மாற்றானின் மண்ணாசைக்கு நான் அடிமையா? என்று சிந்திக்க வைக்காதா? -----சிந்திக்க வைக்கும்—சிந்தித்து உளம் துடிக்கும்.—குமுறும்—நான்வாழவேண்டும்—எனக்கு அதற்கு நாடு வேண்டும்—அந்த நாட்டில் இந்த இன்பப் பொங்கல் திருநாளை நான் கொண்டாடி மகிழவேண்டும் என்று முடிவெடுக்கும்.

வெடிசுட ஆவலோடிருக்கும் தன் குழந்தை பயத்தால் வெடிசுடமுடியாமல் அங்கலாய்ப்போடிருப்பதைக் கண்டு அவன் மனம் துடிக்காமலா இருக்கும்.

பசும்பாலும்—தேனும்—கருப்பஞ்சாறும்—நெய்யும்—பொடித்த பயறும்—சர்க்கரையும் சேர்த்துப் பொங்கிய பொங்கலை உண்ண, மகிழ்வோடு, முகம்மலர, நாவூற உட்கார்ந்திருந்ததே இன்னொரு குழந்தை, அத விண்படையுந்தின் குண்டொலி கேட்டு உயிர் பதற அப்பா எனக் கதறிக் கொண்டோடுமே, அப்போது அவன் மனம் துடிக்காதா? ஏங்காதா உரிமைக்காக? உயிரே விலை என்றாலும் உரிமை வேண்டும் என்றெண்ணமாட்டானா? எண்ணுவான். உரிமையுணர்வு திடம் பெறும். இது தமிழீழத்தில்.

இங்கே எப்படி? ஏன் எங்களில் சிலரை எடுத்துக் கொள்வோமே, ஏதோ சாகும்வரை இங்கே வாழலாம் என்கிற உணர்வில், பணம்பண்ணுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, வீணே—வீணராய் வாழ்கின்றோமே, அதனால் நாளை நடக்கப்போவதை நாம் உணரவில்லை. தவறுகள் நுழையாத குழந்தைகள் நாம் உணராததை உணர்வார்கள். ஏன் ?

இப்போ எங்கள் குழந்தைகள் கேள்வி கேட்கும் பக்குவமடைந் துள்ளார்களே! அவர்கள் கேட்கிறார்களே, அப்பா தமிழ்ப் புத்தகத்திலே, பொங்கல்–தைப்பொங்கல் என்று படமும் போட்டு எழுதியிருக்கிறதே, பேப்பரிலும் பொங்கல் வாழ்த்துகள் எழுதப்பட்டுள்ளனவே, தமிழ்க் கடைக்காரர் பொங்கல் மலிவு விற்பனை என்று எழுதியிருக்கிறார்களே, அது என்னப்பா பொங்கல் விழா ? எப்படியப்பா செய்வினம் என்று கேட்கிறார்கள். நாங்கள் என்ன சொல்லப்போகிறோம்? பொங்கலின் சுவைபற்றிச் சொல்வோம். பொங்கப் விழாவின் காரணம் பற்றிச் சொல்வோம். அதிற்கிடைக்கும் இன்பம் பற்றிச் சொல்வோம். எல்லாவற்றையும் சொல்வோம். சர்க்கரையும்–தேனும்–பாலும்–பயறும்–முந்திரியும் சேர்த்துப் பார்த்து– வாயூறி–சப்புக்கொட்டி , இங்கே நடக்கிற பொங்கல் விழாக்களிலே அப்படியொன்றும் நடக்கவில்லையே? வெறும் நாட்டியமும் பாட்டுந்தானே நடந்தது.. என்று கேட்க, இங்கே பொங்கல் பொங்கமுடியாத காரணத்தைக் கூறி, முற்றம் கோலமிடல்–வாழைநடல்–அடுப்புவைத்து–வெடிகொளுத்தி– சொல்லிவர–அவர்கள் கற்பனையில் திளைத்துவிட்டு–எங்கடை ஊருக்குப் போவோம் பொங்கல் கொண்டாடி விளையாட என்று ஆசையுடன் கேட்கிறார்களே! நிங்கள் திடுக்கிடவில்லையா?,

குழந்தைக்கும் பொங்கல் திருநாளால் நாட்டுணர்வு துளிர்த்ததே, நாங்கள் ஆடம்பர நடனத்திலும்–நகையிலும் உடையிலும் தமிழரெனக் காட்டிவர, எங்கள் குழந்தைகள் பண்பாட்டுப் பொங்கலில் அல்லவா தமிழுணர்வைக் காட்டினார்கள். தாய்நாடு போல் வேறொரு நாடு அமையமுடியாது. என்பதையல்லவா இது காட்டிற்று. எனவே தான் அன்றை விட இன்று தான் பொங்கல் விழா அவசியமாகின்றது.

நாட்டுணர்வை–நல்ல சிந்தனையை–மொழியை– இறைமையை–சுதந்திரத்தை எண்ணும் முனைப்பை–கடமையை உள்ளத்தில் பொங்கவைப்பது, தமிழர் திருநாள்– பொங்கல் திருநாள்––வாழ்க––என் பொங்கல் வாழ்த்துக்கள்.

அன்பின் கமலி

நகும்படி ஓர் தமிழறிஞன் தமிழர்க்கு இன்னல்
நாடுவனேல் அவ்வறிஞன் முட்டாளாவான்
இகழ்மிக்க ஒரு முட்டாள் தமிழர்க்கு இன்னல்
எண்ணானேல் அம்முட்டாள் அறிஞனாவான்

[illegible]

SINNATHURAI KAMALANATHAN
KREISSPARKASSE HANNOVER
KONTO: 1170844037 _ BLZ, 250-502-99.

[illegible]

[illegible] 2027

[illegible]

## நற்றமிழ் தேடுக!

அன்புத் தமிழன்பர்களே! "கமலம்" தன்னால் இயன்றளவு தமிழில் கலந்துள்ள திசைச்சொற்கள் அல்லாத பிறமொழி – புதிய விஞ்ஞானச் சொற்களுக்கான – தனித்தமிழ்ச் சொற்களை தேடி உருவாக்க முயல்கின்றது. இத்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் நீங்கள் கண்டறியும் நறுந்தமிழ்ச் சொற்களை தந்துதவினால் கமலம் தங்களைப் பற்றிய விளக்கங்களுடன் வெளியிடும்.

ஆசிரியர்

சுப்பரத்தினத்தின் (பாரதிதாசனின்)கவிதை.


## வீரத்தமிழன்

தென்திசையைப் பார்க்கின்றேன் என்சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்குதடடா!
அன்றந்த லங்கையினை ஆண்டமறத் தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்
குன்றெடுக்கும் பெருந்தோளான் கொடைகொடுக்கும் கையான்
குள்ளநரிச் செயல்செய்யும் கூட்டத்தின் கூற்றம்
என் தமிழர் மூதாதை! என்தமிழர் பெருமான்!
இராவணன்காண் அவன்நாமம் இவ்வுலகம் அறியும்.

வஞ்சக விபீடணனின் அண்ணனென்று தன்னை
வையத்துச் சொல்லுமொரு மாபழிக்கே அஞ்சும்
நெஞ்சகனை நல்யாழின் நரம்புகளின் தடவி
நிறைய இசைச் செல்வமுது கரும்புலவன் தன்னை.
வெஞ்சமரில் சாதல்வர நேர்ந்திடினும் சூழ்ச்சி
விரும்பாத பெருந்தகையை தமிழ்மறைகள் நான்கும்
சஞ்சரிக்கும் நாவானை வாழ்த்துகின்ற தமிழர்
தமிழரென்பேன் மறந்தவரைச் சழக்கரெனச் சொல்வேன்.

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழச்சி வேண்டும்
விசைபொடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்
சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னை
தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும்
காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்
கடல்போலச் செந்தமிழைப் பெருக்கவெண்டும்
கீழ்ச்செயல்கள் விடவேண்டும் ராவணன்தன்
கீர்த்திசொல்லி அவன்நாமம் வாழ்க்க வேண்டும்.

---



அப்துல் ரகுப்! என் உடன்பிறப்பே!
இனத்துக்காய் இன்னுயிரைத்
தந்தவனே! என்னென்பேன் உன்
இனப்பற்றை. விண்ணெட்ட விரிக!
நின் புகழ்.

http://www.thamizham.net
FREE E-BOOKS (TAMIL) — 1073/09
பொள்ளாச்சி நசன்